
# உணவு முறைமைகளை நிலைமாற்றுவதில் பெண் விவசாயிகளின் வகிபாத்திரம்:

## மக்களின் உணவு முறைமைக்கான சிவில் சமூக அமைப்புக்களின் பரிந்துரைகள்



இணைந்து செயலாற்றியவர்:

WE EFFECT

செயல்படுத்தியவர்:

LAW & SOCIETY TRUST

SAVISTHRI

# உணவு முறைமைகளை நிலைமாற்றுவதில் பெண் விவசாயிகளின் வகிபாத்திரம்:

## மக்களின் உணவு முறைமைக்கான சிவில் சமூக அமைப்புக்களின் பரிந்துரைகள்

லோ அன்ட் சொசைட்டி டிரஸ்டும் (**LST**) சவிஸ்திரி பெண்கள் இயக்கம் இலங்கையும் வீ இபெக்ட் (**We Effect**) உடன் பங்காண்மை அமைத்து இணைந்து சமர்ப்பிக்கும் கலந்தாலோசிப்பு அறிக்கை

**ஒழுங்கமைத்தல்:**

கலாநிதி நிஷாதி சோமரத்ன

ரஸ்மினி த சில்வா

**அட்டைப்பட விளக்கம்:**

தில்ருக்ஷீ டி ஹேரத் BVA (Special) Honours

**வடிவமைப்பு:**

துஸ்யந்த குமார

**வெளியீடு:**

சட்டம் மற்றும் சமூக
நம்பிக்கைப்பொறுப்பின் கூட்டணி
இல. 03, கின்சி டெரஸ்,
கொழும்பு 08,
இலங்கை
Tel: + 94 (0) 112684845
Fax: +94 (0) 112686843
info@lstlanka.org
www.lstlanka.org

# அறிமுகம்

எமது உணவு முறைமை பரிபூரணமாக நிலைமாற்றம் அடையவேண்டிய தேவையினை முன்னெப்பொழுதும் உணர்ந்ததை விட உலகம் தெளிவாக உணர்ந்திருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் ஐநா உணவு முறைமை உச்சிமாநாடு 2021 செப்டெம்பரில் நடக்கவுள்ளது. லோ அன்ட் சொசைட்டி டிரஸ்டும் சவிஸ்திரி பெண்கள் இயக்கமும் வீ இபெக்டுடன் பங்காண்மை அமைத்து பெண் விவசாயிகளுடனும் இலங்கையில் அவர்களின் நிறுவனங்களுடனும் கலந்தாலோசிப்புக்களை நடத்தி எமது உணவு முறைமையின் தலைவர்களாகப் பெண் உற்பத்தியாளர்களை அங்கீகரிக்கும் எமது உணவு முறைமையின் பரிபூரணமான நிலைமாற்றத்திற்கு வழிகாட்டுவதற்காக இந்தப் பரிந்துரைகளை உருவாக்கியுள்ளன.

ஐநா உணவு முறைமை உச்சிமாநாடு பெருநிறுவனங்களின் நலன்களுக்குச் சார்பாகச் செயற்பட்டுத் தற்போதைய கைத்தொழில் உணவு முறைமையினால் பாதிக்கப்பட்டுள்ள சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் மக்களின் குரல்களை ஓரங்கட்டியுள்ளது என்று அச்சப்பட்டுச் சிறு உற்பத்தியாளர்களின்[1] கரிசனைகளை எழுப்புவதில் முன்னணி வகித்த ஏனைய சிவில் சமூக அமைப்புக்களினதும் சமூக இயக்கங்களினதும் கரிசணைகளை நாம் அங்கீகரித்து அவற்றிற்கு ஆதரவு வழங்குகின்றோம்.

பெறுநிறுவன இலாபங்களை விட உணவு இறைமையினை முன்னுரிமைப்படுத்தும் உணவு முறைமையின் மையத்தில் சிறு உற்பத்தியாளர்களினதும் நுகர்வோரினதும் இயற்கையினதும் தேவைகளையும் உரிமையினையும் இருத்திவைக்கும் புத்துயிரளிக்கப்பட்ட உணவு முறைமைக்கு இந்த ஆவணத்தில் உள்ள பரிந்துரைகள் இட்டுச்செல்லும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

1 https://www.foodsovereignty.org/wp-content/uploads/2020/02/EN_Edited_draft-letter-UN-food-systems-summit_070220-4.pdf

இந்தக் கலந்துரையாடலை உலகளாவிய மட்டத்திற்கு வசதிப்படுத்துவதற்கு, FSS இற்கான அதன் நிலைப்பாட்டினை We Effect வலியுறுத்தியுள்ளது. We Effect பின்வருனவற்றிற்காகக் கடப்பாடு பூண்டுள்ளது:

- கூட்டத்திற்கான (தேசிய மற்றும் உலகளாவிய) பின்னூட்டலைப் பெறுவதற்காக நிறுவப்பட்டுள்ள வெவ்வேறு டிஜிட்டல் அஞ்சல் பெட்டிகளில் எமது உள்ளீடுகளை வழங்குவதற்கான ஒரு வளமாக இருத்தல்.

- FSS தொடர்பான கலந்துரையாடல்களிலும் மன்றங்களிலும் எமது பங்குபற்றலுக்காக வாதங்களையும் பிரதான செய்திகளையும் வழங்கல்

- உணவுரிமை தொடர்பான கலந்துரையாடலுக்காகவும் கூர்மைபெற்ற ஆதரித்து வாதாடல் முன்னுரிமைக்காகவும் ஒரு தளத்தினை உருவாக்கல், வீ எபெக்ட் மற்றும் வை அக்ரோபொரஸ்ட்ரி (We Effect, Vi Agroforestry) ஆகியவற்றால் எடுத்துரைக்கப்படும் இணைந்த உலகளாவிய உபாயமார்க்கம் மற்றும் இடைக்கால உபாயமார்க்கம் ஆகியவற்றில் இருந்து முன்தொடர்ந்து செல்லல்

- FSS இனை அடைவதற்காகப் பணியாற்றும் உறுப்பு அமைப்புக்களுடன் சேர்ந்து செயற்படல

ஐக்கிய நாடுகள் FSS இற்கான We Effect இன் பிரதான செய்தி: உணவு முறைமையின் இதயத்தில் மக்களை அமர்த்துங்கள், இலாபத்தினை அல்ல!

கலந்துரையாடலில் We Effect அதன் நிலைப்பாட்டினை வலுப்படுத்தி பின்வரும் ஆதாரச் செய்திகளைப் பயன்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது:- We Effect அதன் கலந்துரையாடல்களில் ஆதாரச் செய்திகளுடன் இந்தச் செய்தியினையும் இந்த நிலைப்பாட்டினையும் வலுப்படுத்தும், ஐநாவினையும் அரசாங்கங்களையும் சிவில் சமூகத்தினையும் பின்வருவனவற்றுக்காக வேண்டிக்கொள்ளும்,

- மனித உரிமைகளை முதன்மைப்படுத்தி அரசியல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கான தேவையினை வலியுறுத்தல்

- அபிவிருத்தியில் அர்த்தபூர்வமான பொது/குடிமைப் பங்கேற்பினை உறுதிப்படுத்தி சுருங்கிவரும் குடிமைச் சுதந்திரத்திற்கு எதிராகப் பணியாற்றல்

- உணவுப் பாதுகாப்பினை விருத்திசெய்வதில்/உறுதிப்படுத்துவதில் சிறு அளவிலான விவசாயிகளின் வகிபாத்திரத்தினை அங்கீகரித்தல்

- அனுபவ அடிப்படையிலான - பாரம்பரிய அறிவினை மதித்தல்

- ஆய்வு சிறு அளவிலான உற்பத்தியாளர்களுக்கு உண்மையில் நன்மை பயக்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்

- தேசிய கலந்துரையாடல்களில் உலகளாவிய கண்ணோட்டத்தினை உள்ளடக்கல்

UNFSS கலந்துரையாடலில் விவசாயிகளின் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை உள்ளடக்கிய கூட்டுறவுகள் மற்றும் பங்காளர்கள் ஆகியோரின் சார்பில் WE Effect அதன்/இந்த நிலைப்பாட்டினை முன்வைக்கின்றது.

உணவுப் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் இலங்கை மக்களின் சுயாதீனமான கருத்துக்களைச் சேகரிப்பதற்கு The We Effect, இலங்கை அலுவலகம் அதன் பங்காளர்களான எல்எஸ்டி மற்றும் சவிஸ்திரி ஆகியவற்றுடன் உறுதியாகப் பணியாற்றி வருகின்றது. விசேடமாக, இந்தப் பங்காண்மையானது இலங்கையின் கூட்டுறவுகள் மற்றும் பெண் விவசாயிகளின் குரல்களை உலகளாவிய செயற்களத்திற்குக் கொண்டுவந்துள்ளது. சிறு அளவிலான உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் மற்றும் இயற்கையின் தேவைகள், கரிசணைகள் மற்றும் உரிமைகளை மையத்தில் இருத்தி பெறுநிறுவன இலாபங்களை விட உணவு இறைமையினை முன்னுரிமைப்படுத்தும் ஓர் உணவு முறைமைக்கு இந்த ஆவணத்தில் உள்ள பரிந்துரைகள் இட்டுச்செல்லும் என நாம் ஒன்றாக எதிர்பார்க்கின்றோம்.

# பின்புலம்

இலங்கையின் விவசாயத் துறைக்குப் பெண்கள் வழங்கும் பங்களிப்பு அங்கீகரிக்கப்படுவதுமில்லை அல்லது தேசிய கொள்கைச் சட்டகங்களில் அது பிரதிபலிப்பதுமில்லை என்றாலும் இத்துறையில் பெண்கள் மிக முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்து வருகின்றனர். உணவு உற்பத்திக்குப் பெண்கள் வழங்கும் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்து வருகின்றது. உலகில் வளர்க்கப்படும் உணவுப் பொருட்களில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமானவற்றை உற்பத்தி செய்வதற்கு தெற்காசியப் பெண்களும் சஹாராவுக்குத் தெற்கேயுள்ள ஆபிரிக்கக் கண்டப் பிரதேசப் பெண்களும் பொறுப்பானவர்களாக இருக்கின்றனர் (உணவு மற்றும் விவசாய அமைப்பு, 2011). எவ்வாறாயினும் உலகளாவிய ரீதியில் இலங்கை உள்ளடங்கலாகப் பெண் விவசாயிகள் உணவு முறைமைகளை வலுப்படுத்துவதற்கான அவர்களின் பூரண ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் அவர்களின் குடும்பங்களிலும் சமுதாயங்களிலும் நாடுகளிலும் உணவுப் பாதுகாப்பினைப் பற்றிப்பிடிப்பதற்கும் தடைபோடுகின்ற அல்லது தவிர்க்கின்ற எண்ணற்ற தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் (த சில்வா, 2020).

உலகின் மூன்றில் இரண்டு பகுதிகளில், உற்பத்தியாளர்கள் என்ற ரீதியிலும் நுகர்வோர்கள் என்ற ரீதியிலும் பெண்களே உணவுப் பொருளாதாரத்திற்கான திறவுகோலாக உள்ளனர். காணிக்காக, கடனுக்காக மற்றும் தகவலுக்காகப் பெண்கள் கொண்டுள்ள சமமற்ற அணுகலைத் தாண்டி, பாரிய பங்களிப்புக்களை வழங்கக்கூடிய அவர்களின் ஆற்றல் காரணமாக விவசாயிகள் என்ற ரீதியில் நாம் பெண்களின் வகிபாத்திரத்தினை மேலும் ஆராயவேண்டும். (சிவா, 1996).

சமூக நீதி மற்றும் ஒப்புரவு ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் சிறு அளவிலான உற்பத்தியாளர்களை, குறிப்பாகப் பெண் உற்பத்தியாளர்களைச் சார்ந்தும் விவசாயச்சூழியல் சட்டகத்தினுள்ளும் நிகழவேண்டிய எமது உணவு முறைமைகளின் நிலைமாற்றத்திற்கான தேவையினை ஆதாரப்படுத்த இந்த அறிக்கை காலப்பொருத்தமுடையதும் புலப்படத்தக்கதுமான சான்றினை வழங்குகின்றது.

இந்த அறிக்கை பின்வருவனவற்றினைப் பகுப்பாய்வு செய்ய நாடுகின்றது:

1. நடப்பு நிலவரங்களைப் புரிந்துகொள்ளல்: இலங்கையின் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் யதார்த்தம் என்ன என்பதை அறிதல்

2. கள மட்டச் சான்றுகளைச் சேகரித்தல்: பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் பிரதான தடைகள் என்ன என்பதை அறிதல்

3. கொள்கை இடைவெளிகளை அடையாளம் கண்டு பரிந்துரைகளை மேற்கொள்ளல்

இந்த அறிக்கைக்கான சான்றுகளைச் சேகரிக்கும் செயன்முறையில் We Effect பங்காளர் நிறுவனங்களில் இருந்தும் கிராம மட்டக் கூட்டுறவுகளில் இருந்தும் ஏனைய சிவில் சமூக நிறுவனங்களில் இருந்தும் இயக்கங்களில் இருந்தும் சுமார் 100 பெண் விவசாயிகளுடன் நாட்டின் ஐந்து மாகாணங்களில் நடத்தப்பட்ட ஆழமான கலந்தாலோசிப்புக்கள் உள்ளடங்குகின்றன.

- அநுராதபுரம் (வடமத்திய மாகாணம்)
- மட்டக்களப்பு (கிழக்கு மாகாணம்)
- வவுனியா மற்றும் முல்லைத்தீவு (வட மாகாணம்)
- நுவரெலியா (மத்திய மாகாணம்)
- ஹம்பாந்தோட்டை (தென் மாகாணம்))

கலந்தாலோசிப்புக்களில் இருந்து கண்டறியப்பட்ட முக்கியமான விடயங்களுடனான பூரணமான தொகுப்புக்களை இணைப்பு 02 இல் காண முடியும்.



# 01

# நடப்பு நிலவரங்கள்: இலங்கையில் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் யதார்த்தங்கள்

## 1.1 சீர்குலைந்துள்ள உணவு முறைமையுடன் மல்லுக்கட்டுதல

நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளில் உருக்கொடுக்கப்பட்டுள்ளவாறு ஐக்கிய நாடுகளினதும் உறுப்பு நாடுகளினதும் அனைத்தும் தழுவிய பல இலக்குகளின் சந்திப்பில் உணவு முறைமைகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இலக்குகளுள் அனைத்து வடிவிலுமான வறுமை, பட்டினி மற்றும் போஷாக்கின்மை ஆகியவற்றினை ஒழித்தல், சிறந்த சுகாதாரத்தினையும் நலனோம்புகையினையும் அடைதல், அத்துடன் சுற்றாடல் நீடுறுதித்தன்மையினை மேம்படுத்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன (ASN, 2020).

*கைத்தொழில் ரீதியான உணவு உற்பத்தி அதிக அளவில் காணப்படுகின்றமையினையும் தாண்டி அனேகமாக பத்துப் பேரில் ஒருவர் போதிய உணவு கிடைக்காதவர்களாக உள்ளனர். மேலும் உலகில் 3 பில்லியன் மக்கள் சுகாதாரமான உணவினைப் பெறுவதற்கான சக்தியற்றவர்களாக உள்ளனர் (World Economic Forum, 2021). உலக உணவு உற்பத்தியின் 50% இற்கும் மேற்பட்ட உற்பத்தி நீடுறுதி மற்றும் ஒப்புரவு ஆகியவற்றுக்கு வெகு தொலைவில் இருக்கின்றது. இன்றுள்ளவாறாக, உலக நிலப் பரப்பின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி உணவினை வளர்ப்பதற்காக அழிக்கப்பட்டுள்ளது.*

### 1.1.1 கொவிட் 19 சூழமைவில் கைத்தொழில்மயமாக்கப்பட்ட உணவு உற்பத்தியின் தோல்வி

எமது உணவு முறைமை ஏற்கனவே சின்னாபின்னமாகியுள்ளதுடன் மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் அது தவறியுள்ளது. சமநிலையற்ற உணவும் போ'ாக்குப் பற்றாக்குறையும் கரிசணைக்குரிய விடயங்களாகத் தொடர்ந்து காணப்படும் அதேவேளை, 15 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களில் 32.6% மானவர்கள் இரத்த சோகையுடையவர்களாக இருக்கின்றனர். 15.9% குழந்தைகள் எடைக் குறைவாகப் பிறக்கின்றன. நாம் எமது உணவுத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களிலேயே இன்னும் பெருமளவு தங்கியுள்ளோம். இது எமது உணவுப் பாதுகாப்பிற்கு ஆபத்தினை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, சர்வதேச சந்தைகள் சுமுகமாக இயங்காத இக்காலகட்டத்தில் இந்த ஆபத்துக் குறிப்பிடத்தக்கதாகும்.

விவசாயிகளுக்கு நீடுறுதியான வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்த எமது விவசாய முறைமை தவறியுள்ளது. விவசாயத்தின் மீதான அதிகரித்த பெருநிறுவனக் கட்டுப்பாடு சிறு அளவிலான உற்பத்தியாளர்களை அவர்களின் நிலங்களில் இருந்தும் வாழ்வாதாரங்களில் இருந்தும் வெளியேற்றி வருகின்றது. இலங்கையின் வறிய மக்களில் 80% இற்கும் மேற்பட்டவர்கள் கிராமப் பிரதேசங்களிலேயே வாழ்கின்றனர் எனும் விடயம், விவசாயத்துடன் பெருமளவு தொடர்புடைய கிராமிய சமுதாயங்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும் பாரதூரமான பிரச்சினைகளையே சுட்டிக்காட்டுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கான விவசாயத்தின் பங்களிப்பு துரிதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கௌவரமான வாழ்வாதாரங்களை வழங்குவதற்குக் கிராமியப் பொருளதாரம் தவறியுள்ளமை கடந்த 40 வருடங்களில் நாட்டில் ஏற்பட்ட இளைஞர்களின் கிளர்ச்சிகளுக்கான பிரதான காரணங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

எமது உணவு முறைமை பிரதான சூழல் மாசாக்கியாகவும் மாறியுள்ளது. உலகில் விவசாய இரசாயனங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இது எமது நீர்நிலைகளையும் மண்ணையும் மாத்திரம் மாசாக்காது ஒட்டுமொத்தக் குடிமக்களுக்கும் பாரதூரமான சுகாதார அபாயநேர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. உலர் வலயத்தில் விவசாயிகளின் மத்தியில் காணப்படும் நாட்பட்ட சிறுநீரக நோய் இந்தப் போக்கிற்கான சிறந்த உதாரணமாகும். பெருமளவிற்கு ஏகவினப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது வனங்களினதும் நீரேந்து பிரதேசங்களினதும் உயிரியில் பல்வகைமையினதும் பாரிய அழிவுக்குக் காரணமாகியுள்ளது.

கைத்தொழில்மயமாக்கத்தினையும் நகர அபிவிருத்தியினையும் ஏற்றுமதி சார்ந்த பண்ட உற்பத்தியினையும் முன்னுரிமைப்படுத்திய பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் உள்நாட்டு விவசாயத்தினையும் உணவுப் பாதுகாப்பு முறைமைகளையும் கீழறுத்துள்ளன. கிராமிய விவசாயத்தில் அரசாங்க முதலீடுகளின் பாரிய அளவு குறைப்புக்கள், உள்நாட்டு விவசாயிகளுக்குப் பாதுகாப்பும் உதவியும் இல்லாமை, மோதல்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஆகியவை உணவு உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரங்களையும் எமது ஒட்டுமொத்த உணவு முறைமையினையும் அதீத பாதிப்புறுநிலைக்கு ஆளாக்கியுள்ளன.

சிறு அளவிலான விவசாயிகள், குறிப்பாகப் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் சமத்துவமின்மைகளையும் பாகுபாட்டினையும் கொவிட் 19 பெருந்தொற்று மிக மோசமாக்கியுள்ளது என்பதையே களத்தில் கிடைக்கும் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கொவிட் 19 ஏற்படுத்திய பொருளாதாரப் பின்னடைவுகளில் இருந்து மீண்டெழுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். நாடு அதன் பொருளதாரத்தினை மீளக்கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் முன்செல்வதற்கான வழி விவசாயமே எனும் கருத்தினை நீடுறுதியான அபிவிருத்தியில் நடைபெறும் சொல்லாடல்கள் அதிகரித்த அளவில் ஆதாரப்படுத்தி வருகின்றன. பெண்கள் வெறுமனே துணைநிலை ஊழியப் படையாக அல்லாமல் பெண் விவசாயிகளாகவும் தொழில் முனைவோராகவும் தலைவர்களாகவும் அந்தப் பொருளாதார முறைமையின் இன்றியமையாத அங்கமாக இருக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். இலங்கையில், அபிவிருத்தியின் பங்காளர்களாகப் பெண் விவசாயிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதனை அடைவதற்கு அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் (த சில்வா,2020).

கொவிட் 19 ஏற்பட்டதும் இலங்கையிலும் உலகம் முழவதிலும் உணவு உற்பத்தியும் விநியோகமும் ஸ்தம்பிதமடைந்தன. பெருந்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்த விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவும் பயணத் தடைகளும் விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மோசமாகப் பாதித்து நாட்டின் ஒட்டுமொத்த உணவு முறைமையினையும் உணவுப் பாதுகாப்பினையும் பாதிப்புறுநிலைக்கு ஆளாக்கின.

கொவிட் 19 பெருந்தொற்றின் பரவல் நாட்டின் உணவு முறைமையில் பாரதூரமான விளைவினை ஏற்படுத்தியுள்ளது. உள்நாட்டு உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கான தேவையினை உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் செயலிழப்புக் கோடிட்டுக்காட்டியுள்ளது. சூழியல் விவசாய நடைமுறைகளுக்கு உதவுவதற்காக விவசாய இரசாயனங்களையும் உரத்தினையும் இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்ட தடைகள் உற்பத்திக்கான மாற்று மாதிரிக்கான தேவையினைச் சுட்டிக்காட்டுகின்றன. சீவனோபாய விவசாயம், உள்நாட்டு உணவு உற்பத்தி மற்றும் சிறு அளவிலான விவசாயிகளுக்கான உதவி ஆகியவை கடந்த 30 வருடங்களாக நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகளினால் முற்றுமுழுவதும் கீழுறுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் கொள்கைகள் இப்போது உள்நாட்டு ரீதியாகவும் உலகளாவிய ரீதியிலும் மீள்மதிப்பிடப்பட்டுத் திருத்தப்படவேண்டும்.

1960களில் பசுமைப் புரட்சியினை ஏற்றுக்கொண்டதில் இருந்து இலங்கையில் விவசாயத் துறையில் இரசாயன உள்ளீடுகளின் பயன்பாட்டில் அபரிமிதமான அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக விவசாயிகள் நிலைபேறற்ற விவசாய நடைமுறைகளைக் கைக்கொண்டு பாரம்பரிய அறிவை ஆதாரமாகக் கொண்ட நீடுறுதியான நடைமுறைகளை கைவிட்டமை நிகழ்ந்துள்ளது. பயிர்ப் பல்வகைமையினைத் தவிர்த்து ஏகவினப் பயிர்ச்செய்கை முறைமைகளைப் பின்பற்றிய விவசாயிகள் மண் வளம் பாழ்படுவதற்குத் தீவிர பங்களிப்பு வழங்கியுள்ளதுடன் சூழியல் அழிவுகளுக்கும் வழியேற்படுத்தி ஈற்றில் நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) போன்ற காரணம் அறியப்படாத நோய்கள் பரவுவதற்கும் வழிசமைத்துவிட்டனர்.

ஏகவினப் பயிர்களின் மேம்பாடு விவசாய நவீனமயமாக்கலின் விளைவாகும். கொவிட் 19 இன் தாக்கங்கள் பற்றிப் பெண் விவசாயிகளுடன் கலந்துரையாடிய வேளை, ஒரு விவசாயியின் வீட்டில் உணவுப் பற்றாக்குறை என்பது தமது பெற்றோரின் தலைமுறையில் கேள்விப்படாத போக்கு என்பது அவர்கள் மத்தியில் பகிரப்பட்ட ஒரு பொதுவான உணர்வாகக் காணப்பட்டது. தமது சொந்தக் குடும்ப மட்டத்தில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்த விவசாயிகள் தவறியமை, தற்போதைய உணவு முறைமை சீர்குலைந்திருப்பதற்கான அப்பட்டமான குறிகாட்டியாக இருக்கின்றது. ஒரு பயிரை மாத்திரம் வளர்த்த விவசாயிகளால் அதனைத் தமது குடும்ப நுகர்வுக்காகப் பயன்படுத்த முடியவுமில்லை அல்லது கொவிட் 19 கட்டுப்பாடுகள் காரணமாகச் சந்தையில் விற்கவும் முடியவில்லை. விவசாயிகளை ஏகவினப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு ஊக்குவிக்கும் அரசாங்கம் மற்றும் விவசாய விரிவாக்கல் சேவைகள் போன்ற இயலுமாக்கல் சக்திகளின் காரணமாக இலங்கையில் ஏகவினப் பயிர்ச்செய்கைக்கு மாறிய விவசாயிகள் அதிகரித்துள்ளனர் என்பதைக் கலந்தாலோசிப்புக்களில் இருந்து கண்டறிந்த விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## 1.2 நியாயமான உணவு முறைமையினை நோக்கி - பெண்களே பிரதானமானவர்கள்

*உணவு முறைமையில் பெண்கள் பரந்த வீச்சிலான முக்கியமான வகிபாத்திரங்களையும் பொறுப்புக்களையும் முனைப்புடன் பொறுப்பேற்று வருகின்றனர். இவற்றுள் அடங்குபவை: பயிர்களை வளர்த்தல், கால்நடைப் பாராமரிப்பு, உணவு தயாரித்தல், விதைகளைப் பாதுகாத்தல் மற்றும் பாரம்பரிய அறிவினைச் சமுதாயத்திற்கும் அடுத்த தலைமுறைக்கும் பரப்புதல். எவ்வாறாயினும், உணவு முறைக்குப் பெண்கள் வழங்கும் பங்களிப்புக்கள் பொதுவாக அங்கீகரிக்கப்படுவதில்லை மற்றும் சந்தையுடனும் / விவசாயச் சமுதாயத்துடனும் / அரசாங்கத்துடனும் ஒப்புரவான வகையில் அவர்கள் சம்பந்தப்படுவதைத் தடுக்கும் தடைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர்.*

*மிகவும் உள்ளடக்கும் தன்மையுடையதாக இருக்கும் வகையில் உணவு முறைமைகளை நிலைமாற்றுவது, பெண்கள் சமமாகப் பங்குபற்றி நலன்பெறுவதற்கு மாத்திரம் அவர்களை இயலுமாக்காது உபாயகரமான வாழ்க்கைத் தெரிவுகளை மேற்கொள்வதற்கு அவர்களை வலுவூட்டும் அணுகுமுறைகளையும் தேவைப்படுத்துகின்றது. உள்ளடக்கும் தன்மையுடைய உணவு முறைமைகள் பெண்களுக்கு மாத்திரம் நன்மையளிக்காமல் அவர்களின் குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் மிகவும் பரந்த அளவில் நலன் பயக்கும். இதில் விவசாய உற்பத்தித்திறனில் மேம்பாடும் குடும்ப உணவுப் பாதுகாப்பும் உணவுசார் சமத்துவமும் உள்ளடங்குகின்றன* ***(IFPRI, 2020).***

விவசாயிகளின் உரிமைகளையும் நுகர்வோரின் உரிமைகளையும் இயற்கையின் உரிமைகளையும் இலாபங்களை விட முன்னுரிமைப்படுத்தும் ஒரு முறைமைக்கு நாம் எமது உணவு முறைமையினை முற்றுமுழுவதுமாக நிலைமாற்றவே எதிர்பார்க்கின்றோம். நிலைமாற்றப்பட்ட முறைமை அனைவருக்கும் உணவு இறைமையினை உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் எமது சுற்றாடல் முறைமைகளின் மீளுருவாக்க ஆற்றல்களையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டும.

உணவு முறைமைகளை நிலைமாற்றுவது சமூக பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றாடல் கூறுகளைக் கொண்டுள்ளது என்பதை இந்த அறிக்கை அங்கீகரிக்கின்றது - எவ்வாறாயினும் நீடுறுதியான உணவு முறைமைகளை உருவாக்குவதற்குப் பால்நிலை நீதி என்பது முக்கியமான பங்களிப்புக் காரணி என்பதை உறுதிப்படுத்துவதில் அறிக்கை கவனம் குவிக்கின்றது. உணவு மற்றும் அதன் உற்பத்திக்கான அணுகல் மற்றும் நுகர்வு ஆகியவை பால்நிலைச் சமத்துவமின்மைகளுடன் அடுக்கடுக்காக வைக்கப்பட்டால், உணவு முறைமைகள் தோல்வியுற்று நிலைபேறற்றவை என்பதைத் தவிர்க்கமுடியாது நிரூபிக்கும்.

பெண்கள் வளங்களை அணுகுவதையும் கட்டுப்படுத்துவதையும் தடுக்கின்ற பால்நிலைப் பாகுபாடுமிக்க நியமங்களுடன் பெண்கள் விளிம்புநிலைக்குத் தள்ளப்படும் நாடுகளில், மக்கள் அதிகமாகப் பட்டினியால் வாடுவதைக் காணமுடிகின்றது. இந்த நிகழ்வுக்கான பிரதான காரணம் பால்நிலைச் சமத்துவம் மற்றும் உணவு முறைமைகள் ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதாகும் (IPS, 2020).

உலகளாவிய ரீதியில், ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண் விவசாயிகளின் உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க அளவு குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் 20-30% எனும் பால்நிலை விளைவு இடைவெளி உருவாகுகின்றது. இந்தப் பால்நிலை இடைவெளியின் இருப்புக்குப் பின்னால் இருக்கும் பிரதான ஊக்கிகள் போதிய விதத்தில் தீர்க்கப்பட்டால், கிட்டத்தட்ட 36 மில்லியன் மக்களைப் பட்டினியில் இருந்து மீட்க முடியும் (IFAD, 2014).

இலங்கையில் பொருளாதார ரீதியாக முனைப்பான மக்கள் தொகையில், 34.3% பெண்களாவர். தொழில்புரியும் இப்பெண்கள் குழமத்தின் மத்தியில், சுமார் 27.7% விவசாயத் துறையில் வேலை செய்கின்றனர் (தொகைமதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2020). பெண் விவசாயிகளும் கிராமியப் பெண்களும் உற்பத்தித்திறன்மிக்க விவசாய வளங்களைப் பெறச் சமமான அணுகலை உறுதிப்படுத்துவது, அவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அவர்களின் சமுதாயங்களையும் பரந்த உணவு முறைமைகளையும் பாதிக்கின்ற விவசாயக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய சொல்லாடலில் அர்த்தபூர்வமாகப் பங்குபற்றவும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தவும் அவர்களை இயலுமாக்கும். விவசாயத் துறையில் பெண்கள் துணைநிலை ஊழியப் படையாகவே கருதப்படுகின்றனர். விவசாயத் துறையில் பெண்களின் உண்மையான பங்களிப்பு பெருமளவுக்கு அங்கீகரிக்கப்படாமலேயே விடப்படுகின்றது. உணவு உற்பத்திக்குப் பெண்கள் வழங்குப் முனைப்பான பங்களிப்பில் கவனம் செலுத்தத் தவறுகின்றமையும் அவற்றினை அங்கீகரிக்கத் தவறுகின்றமையும் சமுதாய மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நீடுறுதியான அபிவிருத்திக்குத் தடங்கல் ஏற்படுத்தும். ஏனெனில் பெண்கள் அவர்களின் உள்ளூர் சூழியல் முறைமையுடனும் உயிரியில் பல்வகைமையுடனும் ஆழமான ஈடுபாட்டினைக் கொண்டுள்ளனர்.

காலநிலைத் தீர்வுகளுக்குத் தலைமை தாங்குவதற்கான, பால்நிலைப் பாகுபாடுமிகு தடைகளை எதிர்ப்பதற்கான, உலகிற்குத் தொடர்ந்தும் உணவளிப்பதற்கான பெண் விவசாயிகளின் ஆற்றல் அரசாங்கங்களாலும் அபிவிருத்தி முகவர்களாலும் பெருமளவுக்குக் கீழறுக்கப்படுகின்றன. உணவு முறைமைக்கான பெண்களின் பங்களிப்பு பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளில் தொடர்ந்தும் உள்வாங்கப்படாமலேயே இருந்து வருகின்றது. ஏனெனில் இவர்களின் பங்களிப்பு அரிதாகவே உற்பத்தித் திறன்மிக்க வேலையாகக் கருதப்படுகின்றது. அதிகமான ஆணாதிக்க - பொருள்வாதப் பொருளாதாரங்களில், வீட்டுக்கு உள்ளேயும் வீட்டிற்கு வெளியேயும் பெண்களின் வேலையினை வரைவிலக்கணப்படுத்துவதில் பொருளியலாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் அவை இரண்டு வகைகளினுள்ளும் வருகின்றன (Gordon, 2009).

பூகோளமயமாக்கல் நிகழ்வுக்கு எதிராக முன்வைக்கப்படும் காட்டமான விமர்சனம்தான் உணவு மற்றும் விதைகளின் அடையாளத்தினையும் உரித்தாண்மையினையும் பூகோளமயமாக்கல் இலாப நோக்கினைக் கொண்ட கூட்டுத்தாபனங்களுக்கு மாற்றிவிட்டது என்பதாகும். உணவு எனும் எண்ணக்கரு போ'ாக்குமிக்க ஒரு மூலம் என்பதில் இருந்து இலாபங்களை உச்சப்படுத்துவதற்காக சூழ்ச்சித்திறத்துடன் பயன்படுத்தக்கூடிய ஒரு பண்டமாகக் குறைக்கப்பட்டுள்ளது (Shiva, 2009).

**உணவு முறைமைகளை மீண்டும் நீடுறுதியானதாகவும் ஒப்புரவுமிக்கதாகவும் ஆக்குவதற்கான ஒரே தீர்வாக இருப்பவர்கள் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களும் அடிப்படைப் பெண் விவசாயிகளுமே. எவ்வாறாயினும், இந்தப் பதவிகளை அவர்கள் கோருவதற்கு, அவர்களுக்குச் சரியான வாய்ப்புக்களும் கருவிகளும் வளங்களுக்கான அணுகலும் வழங்கப்படவேண்டும்.**



# 02

# களமட்டச் சான்று:
# பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் பிரதான தடைகள்

கலந்தாலோசிப்புக்களில் இருந்து கண்டறிந்தவற்றின் அடிப்படையில், இலங்கையில் பெண் விவசாயிகள் முகங்கொடுக்கும் சவால்களின் ஐந்து பிரதான பரப்புக்களை இந்த அறிக்கை அடையாளம் காண்கின்றது.

## 2.1 இயற்கை வளங்களை அணுகலும் அவற்றின் மீதான கட்டுப்பாடும்

வளர்முக நாடுகளில் 60 - 80% உணவு உற்பத்திக்குப் பெண் விவசாயிகளே பொறுப்பாக இருக்கின்றனர். எவ்வாறாயினும் அவர்கள் நிலங்களில் வெறும் 2% மாத்திரமே உரிமை கொண்டுள்ளனர் (Oxfam, 2010).

விவசாயத்தில் காணப்படும் பால்நிலை ஏற்றத்தாழ்வுகள், குறிப்பாக இயற்கை வளங்களை அணுகுதல் மற்றும் அவற்றின் கட்டுப்பாடுகள் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் மிகப்பெரியவையாக இருக்கின்றன. இலங்கையில், காணியற்ற நிலை அல்லது காணிக்கான அணுகல் இல்லாமை பெண்கள் விவசாயத்தில் பங்குபற்றுவதை மாத்திரம் தடுக்காமல் பெறுமானச் சங்கிலிகள் எனும் சூழமைவினுள் திறனற்ற தொழிலாளர்கள் மற்றும் அடிப்படை உற்பத்தியாளர்கள் என்ற ரீதியில் அவர்களின் வகிபாத்திரத்திற்கு முட்டுக்கட்டை போடுகின்றது. ஒரு விவசாயியாக அங்கீகரிக்கப்படுவதற்குக் காணிக்கான அணுகல் மற்றும் காணி உரித்தாண்மை ஆகியவை பிரதான பங்களிப்பு வழங்கும் காரணிகளாக இருக்கின்றன.

காணி உரித்தாண்மை இல்லாத காரணத்தினால் கொள்கை வகுத்தல் பரப்புக்களில் பெண் விவசாயிகள்

முகங்கொடுக்கும் விலக்கிவைப்பு நடைமுறையிலும் பின்விளைவுகளைக் கொண்டுள்ளது. நீரினை அணுகல், நிதிச் சேவைகள், சந்தைகள் மற்றும் விவசாய விரிவாக்கல் சேவைகள் எனப் பல தடைகளை விதிப்பதற்கு இது இட்டுச்சென்றுள்ளது.

காணிக்கான அணுகல் இல்லாமையினையும் தாண்டி, பெண்கள் தொடர்ந்தும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றாலும் அவர்கள் சீவனோபாயப் பயிர்ச்செய்கையில் மிகக் குறைவான தரத்திலேயே பெருமளவுக்கு வேலை செய்கின்றனர் அல்லது விவசாயப் பண்ணைகளில் நாட்கூலிகளாக வேலை செய்கின்றனர். மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் மிகக் குறைவான வருமானத்தினையே ஈட்டித் தருவதுடன் பொதுவாகப் பருவ காலங்களில் மேற்கொள்ளப்படுவதாகவும் ஒழுங்கற்றதாகவும் இருக்கின்றன.

காணி உரித்தாண்மையில் காணப்படும் பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் தற்போது அமுலில் இருக்கும் காலங்கடந்த பாகுபாடுமிக்க காணிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளினால் ஏற்படுத்தப்படுகின்றன. காணி உரித்தாண்மையில் சமத்துவமின்மைகளை வழக்காற்றுச் சட்டங்களிலும் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டங்களிலும் (LDO) சான்றாகக் காணக்கூடியதாகவுள்ளது. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணை பெண் வாரிசினை விட ஆண் வாரிசுக்கே முன்னுரிமை அளிக்கின்றது. ஆண்களுக்குப் பரிவு காட்டும், குறிப்பாகக் குடும்பத்தில் இளைய ஆண் பிள்ளைக்குப் பரிவு காட்டும் மரபுரிமையின் தொடர்ச்சியினைக் கிராமியப் பெண்களின் காணி உரித்தாண்மைக்கான பாரதூரமான முட்டுக்கட்டை எனக் கருதலாம். பிரதானமாக, கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் ஆகியவற்றின் கூறுகள் தீர்மானம் வகுத்தலையும் காணிச் சொத்துக்களைக் கட்டுப்படுத்துவதையும் ஆண்களுக்கே குறித்துரைக்கின்றன. இந்த நிகழ்வு நகரப் பிரதேசங்களில் மிகவும் பரவலாக இல்லாவிடினும், கிராமிய விவசாயச் சமுதாயங்கள் மேற்குறிப்பிட்ட பாரம்பரியச் சட்டங்களுக்கு இறுக்கமாகக் கட்டுப்படுகின்றன - இது பூரண ஆற்றலுடன் செயற்படுவதற்கான பெண் விவசாயிகளின் ஆற்றலை இன்னும் குறைக்கின்றது.

வங்கிகள் கடன்களை வழங்குகையில் மிகப்பொதுவாகப் பிணையுறுதியாகக் காணிகளைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்துகின்றன. முறைசார் கடன் திட்டங்கள் மற்றும் நிதிச் சேவைகள் ஆகியவற்றுக்கான அணுகல் இன்றிப் பெண் விவசாயிகள் போராடுகின்றனர். காணிக்கான உரித்தாண்மை இல்லாமையானது நாட்டில் பெண் விவசாயிகளைத் தவிர்க்கமுடியாத விதத்தில் மிகவும் பாதிப்புறு நிலைக்குரியவர்களாக ஆக்கியுள்ளதுடன் பல பெண்கள் நுண் கடன் நிறுவனங்களிடம் இருந்து உயர் வட்டிக்குக் கடன்களைப் பெற்றுள்ளதன் மூலம் ஒழுங்கமைக்கப்படாத நுண்நிதி நிறுவனங்களுக்கு இரையாகியுள்ளனர்.

'காணி உரித்தாண்மை பொதுவாக ஆண்களை மையப்படுத்தியதாகவே பார்க்கப்படுகின்றது. காணிகள் பொதுவாக குடும்பத் தலைவரின் பெயரிலும் வழங்கப்படுகின்றன. இங்கே ஆண்களே குடும்பத் தலைவர்களாக நோக்கப்படுகின்றனர்' - நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் மோதலுக்குப் பின்னரான பிரதேசங்களில் பிரதானமாகப் பெண் விவசாயிகளுடன் நடத்தப்பட்ட கலந்தாலோசிப்புக்களின் போது இது மீண்டும் மீண்டும் திரட்டப்பட்ட பின்னூட்டலாக இருந்தது.

காணிக்கான உரித்தாண்மை இல்லாமையின் விளைவு இலங்கையில் பெண் விவசாயி ஒருவரின் மீது பல தொடரான இணைந்த விளைவுகளை ஏற்படுத்துகின்றது. காணி உறுதி இல்லாத காரணத்தினால் பெண் விவசாயி ஒருவருக்கு அரசாங்கத்தினால் நடத்தப்படும் கமநல சேவை நிலையத்தில் பதிவு செய்வதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அரசாங்க முறைமையில் பதிவு செய்யப்படுவதற்கும் விரிவாக்கல் சேவைகள், சந்தைத் தகவல்கள், பயிற்சி, மானியங்கள் ஆகியவற்றினைப் பெறுவதற்கும் விவசாயிகள் சங்கத்தில் உறுப்பினராகுவதற்கான தகுதியினைப் பெறுவதற்கும் கூட காணி உறுதியினை வைத்திருப்பது முன்தேவைப்பாடாக இருக்கின்றது. காணி உரிமையாளர்களான பெண்களை மாத்திரமே நீர்ப்பாசன அமைப்புக்கள் ஏற்றுக்கொள்கின்றன. இது

அரசாங்கத்தினால் விவசாய நோக்கத்திற்காக வழங்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்குக் காணியற்ற கிராமியப் பெண்கள் அணுகலைப் பெறுவதைத் தடுக்கின்றது (FAO, 2018). விவசாய அமைப்புக்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புக்கள் ஆகியவற்றில் உறுப்பினராக இல்லாமலிருப்பது பெண்கள் அவர்களின் எக்கரிசனைகளையும் எழுப்புவதற்கான வாய்ப்புக்களையும் தளங்களையும் அகற்றுகின்றது என்பதுடன் பொதுவாக இப்பெண்கள் விவசாயி என்ற ரீதியில் ஓர் அடையாள உணர்வினையும் அங்கீகாரத்தினையும் உருவாக்குவதையும் மறுக்கின்றது.

பெருமளவுக்கு அங்கீகரிக்கப்படாவிட்டாலும், உலகம் முழுவதும் பெண் விவசாயிகள் சுதேச விதை வகைகளினதும் பாரம்பரிய விவசாய நடைமுறைகளினதும் பாதுகாவலர்களாகத் தொடர்ந்து இருந்து வருகின்றனர். பல்வேறு மட்டங்களில் எண்ணற்ற தடைகள் போடப்படுகின்றமையினைத் தாண்டி, தமது சொந்தச் சமுதாயங்கள் முதல் பல்தேசியக் கம்பனிகள் வரை பெண் விவசாயிகள் உள்நாட்டு உணவு முறைமையினைத் திடப்படுத்துவதில் தொடர்ச்சியாக மீண்டெழுந்தன்மையினைக் காட்டி வருகின்றனர். சுதேச விதை வகைகளைப் பாதுகாப்பது பெண் விவசாயிகள் தலைமுறைகளாகக் கௌரவிக்கும் அவ்வாறான ஒரு கடப்பாடாகும். கலந்தாலோசிப்பில் பெண் விவசாயிகள் குறிப்பிட்டது போல், விதைகளைக் காப்ரேட் மயமாக்கியமை உயிரியல் பல்வகைமையின் பாதுகாவலர்களாகப் பெண்கள் வகித்த வகிபாத்திரத்தினை அவர்களிடம் இருந்து பறித்துள்ளதுடன் பெண்கள் தமது உள்ளூர் விதை வகைகளைப் பாதுகாத்துப் பகிரும் உரிமைகளையும் அவர்களிடம் இருந்து பறித்துள்ளது.

## 2.2 சந்தைகளுக்கான அணுகல்

மேலே குறிப்பிட்டவாறு, இலங்கையில் பொருளாதார ரீதியாக முனைப்பான மக்கள் தொகையில் பெண்கள் வெறும் 34.3%. ஆகவே உள்ளனர். தொழில்புரியும் இந்தக் குழுமத்தில் இருந்து கிட்டத்தட்ட 27.7 % விவசாயத் துறையில் தொழில் புரிகின்றனர் (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2020). இப்பெண்களில் பெரும்பான்மையானவர்கள் சீவனோபாய விவசாயத்தில் ஈடுபட்டு வருவதுடன் விவசாய உற்பத்தியின் வர்த்தக மட்டங்களினுள் நுழைவதிலும் பெறுமதிச் சங்கிலிகளில் உயர் மட்டங்களைத் தக்கவைப்பதிலும் சந்தைகளுக்கான ஒட்டுமொத்த அணுகலைப் பெறுவதிலும் எண்ணற்ற தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

கலந்தாலோசிப்புக்கள் கோடிட்டுக்காட்டியவாறு, பாரம்பரியப் பால்நிலை வகிபாத்திரங்கள் தொடர்பாக நிலவும் சமூக நியமங்களும் அதனுடன் சேர்ந்த பால்நிலைப் பாகுபாடுமிக்க கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் இருப்பும் பெண் விவசாயி ஒருவர் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கும் சந்தைப் பொருளாதாரத்தில் தனது பிரசன்னத்தினை நிலைநாட்டுவதற்கும் அவருக்குத் தடையாக இருக்கின்றன. பெண் ஒருவர் பௌதிக ரீதியாகச் சந்தைக்குச் சென்று சந்தைப்படுத்தல் தெரிவுகளை மதிப்பிடுவதில் பிரதான தீர்மானக் காரணியாக நடமாட்டம் எனும் விடயம் அடையாளம் காணப்பட்டுள்ளது. பெண் விவசாயி ஒருவரின் நடமாட்ட மட்டத்தினைக் கட்டுப்படுத்தும் பிரதான காரணியாக வீட்டு வேலைகள் உள்ளிட்ட அவரின் பராமரிப்புப் பொறுப்புக்கள் காணப்படுகின்றன. பெண் விவசாயிகள் சந்தை முறைமைகளை அணுகுவதிலும் விவசாயிகள் அமைப்புக்களிலும் கூட்டுறவுகளிலும் பங்குபற்றுவதிலும் உரிய போக்குவரத்து இல்லாமையும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையும மேலும் தடைகளை ஏற்படுத்துகின்றன. மேற்குறிப்பிட்ட வகையின் பெண் உற்பத்தியாளர் குழக்களுடன் ஈடுபாடு இல்லாமையானது சந்தைக் கேள்விகள் பற்றிய தகவல்களுக்கான சந்தை முறைமைகள் பற்றிய தகவல்களுக்கான மற்றும் வர்த்தக ஈடுபாட்டுக்கான வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களுக்கான அணுகலைக் குறைக்கின்றன.

மத்திய மாகாணத்தில் நுவரெலியாவைச் சேர்ந்த பெண் விவசாயிகள் சந்தைகளை அணுகுவதில் தாம் எதிர்நோக்கும் பிரதான சவால்களைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர் - 'சந்தைப்படுத்தல் செயன்முறையில் பெண்கள் பாரிய அசௌகரியத்துக்கு முகங்கொடுக்கின்றனர். எமது உற்பத்திகளை விற்பதற்குச் சந்தைகளுக்கு அதிகமாகச் செல்பவர்கள் ஆண்களே. பிரதான சந்தைகளுக்குப் பெண்கள் செல்கையில் சரியான விலைகளைப்

பற்றிக் கலந்துரையாடுவதில் அவர்கள் அடிப்படையில் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.'

பெண் விவசாயிகள் சீவனோபாய மட்டத்தில் இருந்து அவர்களின் உற்பத்திகளை வர்த்தக மட்டங்களுக்குத் தரமுயர்த்திப் பெறுமதிச் சங்கிலிகளில் மேலே செல்வதற்குத் தேவைப்படும் சந்தை இணைப்புக்களையும் நிதி வளங்களையும் ஒப்பீட்டு ரீதியாகச் சொற்பமாகவே கொண்டுள்ளனர். ஒட்டுமொத்தச் சந்தைப் பொருளாதாரத்தில் சந்தைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், சந்தைகளை அடையாளம் காணல், தீர்மானம் வகுத்தல், பேரம் பேசுதல் மற்றும் பேச்சுவார்த்தை நடத்தல் ஆகியவை ஆண்களின் வேலைகளாகவே புலனுணரப்படுகின்றன. மேலும், பெண் விவசாயி ஒருவர் அடிப்படை உற்பத்தியாளர் என்ற நிலையில் இருந்து பெறுமதிச் சங்கிலிகளில் உயர் மட்டங்களுக்குச் செல்வதற்கு அவரை இயலுமாக்கும் விசேட சந்தைச் சான்றுப்படுத்தல்களுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை அரிதாகவே கொண்டுள்ளார்.

## 2.3 நிதிச் சேவைகளுக்கான அணுகல்

பெண் விவசாயிகள் சீவனோபாயப் பயிர்ச்செய்கையில் இருந்து விவசாயத்தின் வர்த்தக மட்டங்களுக்கு முன்னேறுவதைத் தடுக்கும் பிரதான தடையாக நிதிச் சேவைகளுக்கான அணுகல் இல்லாமை அடையாளம் காணப்பட்டுள்ளது. கிராமியப் பெண்கள், குறிப்பாகப் பெண் விவசாயிகள் கடன் வசதிகளைப் பெறவும் நிதி மூலதனங்களைப் பெறவும் சேமிப்புப் பொறிமுறைகளைப் பெறவும் அவர்களை இயலுமாக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட நிதிச் சேவைகள் கிடைப்பது அதீதமான அளவு அரிதாகவே காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், ஒழுங்கமைக்கப்படாத நுண்நிதிக் கம்பனிகள் கிராமிய விவசாய சமுதாயங்களின் மத்தியில் ஆகக்கூடுதலாகக் காணப்படுவதுடன் கிராமியப் பெண்களின் பாதிப்புறுநிலையினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதனை மூலதனமாக்குவதாக இக்கம்பனிகளின் மீது ஏராளமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இலங்கை சனத்தொகையில் 45% மேற்பட்டவர்கள் நாளொன்றுக்கு 5 அமெரிக்க டொலர்களுக்குக் குறைவான தொகையினைக் கொண்டே வாழ்க்கை நடத்துகின்றனர் (உலக வங்கி 2017). கிராமியப் பெண் விவசாயிகள் பொதுவாக இக்குழக்களுக்குள் அடங்குகின்றனர். இவர்கள் வங்கிகளில் இருந்து சேவைகளைக் கோருவதில் இருந்து இரண்டு பிரதான காரணங்களால் தடுக்கப்படுகின்றனர்: பிணையுறுதி இல்லாமை மற்றும் உத்தரவாதப்படுத்துபவர்களைச் சமர்ப்பிக்கும் ஆற்றலின்மை. பொதுவாக, கடன் தவணைக் கொடுப்பனவுகள் நுண் நிதிக் கம்பனிகளால் வாராந்தம் வசூலிக்கப்படுகின்றன. சந்தைகளை அணுகுதலில் தடைகள் உள்ளிட்ட எண்ணற்ற தடைகளுக்குப் பெண் விவசாயிகள் ஏற்கனவே முகங்கொடுத்துவரும் தற்போது நிலவும் உள்நாட்டுச் சூழமைவில் வாராந்த அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ள கடன் மீள்கொடுப்பனவு இவர்களின் நிதி ஆற்றலை இன்னும் மோசமாக்கவே செய்யும்.

பெண் விவசாயி ஒருவரினால் கடனினை மீளச்செலுத்த முடியாத நிலை ஏற்படுகையில் நுண் நிதிக் கம்பனிகள் அவரை இன்னுமொரு கடனினைப் பெறுமாறு பலவந்தப்படுத்துவதை வழமையாகக் கொண்டுள்ளனர். இது பாதிப்பினை ஏற்படுத்தும் கடன் சுற்றினுள் அவர்களை மேலும் சிக்கவைக்கின்றது. அத்துடன், கடன் மீள்கொடுப்பனவில் இடைவெளிகள் ஏற்படுகையில் கடன் வசூலிப்பவர்கள் பெண்களைப் பல்வேறு வடிவிலான வாய்மூல வன்முறை, உடல்ரீதியான வன்முறை மற்றும் பாலியல் வன்முறை போன்றவற்றுக்கு உட்படுத்தும் முறைப்பாடுகளும் காணப்படுகின்றன.

நுண்நிதிக் கம்பனிகளின் இந்த இயக்கக் கட்டமைப்பு உற்பத்தித்திறன்மிக்க விவசாய ஊழியத்தில் ஈடுபடுவதற்கான பெண்களின் ஆற்றலை மேலும் முடக்குகின்றது. உயர் வட்டியுடனான கடன்களைச் செலுத்தி முடிப்பதற்காகப் பெண்கள் விவசாயத்தில் இருந்து பூரணமாக விலகி வேறு நாட்கூலி வேலைகளில் ஈடுபடுவதைக் களமட்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இக்கடன் சேவைகளை வழங்கும் ஆவணங்கள் பொதுவாக ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ளதால் அவற்றில் உள்ளடங்கியுள்ளவை என்ன என்பதைப் பற்றி எதுவுமே அறியாமல் பெண் விவசாயிகள் பொதுவாக இக்கடன் சேவைகளைப் பெறுவதற்கான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுகின்றனர். இச்சேவைகளை வங்கியில் இருந்து பெறுவதற்கான தெரிவு பொதுவாகப் புறக்கணிக்கப்படுகின்றது. ஏனெனில் வங்கிகள் பிணையுறுதிகளையும் உத்தரவாதப்படுத்துனர்களையும் தேவைப்படுத்துகின்றன. மேலும் கடன் விண்ணப்பத்தைச் செயன்முறைப்படுத்தி அங்கீகாரத்தினைப் பெறுவதற்கும் நீண்ட காலம் எடுக்கின்றது என்பதுடன் இந்த அங்கீகாரமும் கடனினை மீளச் செலுத்துவதற்கான விண்ணப்பதாரியின் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. ஏற்கனவே பல்வேறு பொருளாதார மற்றும் சமூகக் க்'டங்களினால் அல்லாடிக்கொண்டிருக்கும் பெண் விவசாயிகளுக்கு மேலே குறிப்பிட்ட தெரிவடிப்படைகள் சாதகமான வாய்ப்பினை வழங்குவதில்லை. கிடைக்கக்கூடியதாக இருக்கும் கடன் திட்டங்கள் பற்றியும் நிதிச் சேவைத் தெரிவுகள் பற்றியும் விழிப்புணர்வின்மை, பிணையுறுதிகள் போதாமல் இருப்பது அல்லது அவை இல்லாதிருப்பது மற்றும் உறுதியற்ற வருமானம் ஆகியவையே பெண் விவசாயிகள் நம்பத்தகுந்த நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடுக்கும் காரணிகளில் அடங்குகின்றன. பெண்கள் வர்த்தக விவசாயத்தில் ஈடுபடுவதில் இருந்தும் சந்தை முறைமைகளுடன் இணைவதில் இருந்தும் இது அவர்களைத் தடுக்கின்றது.

## 2.4 தொழில்நுட்பத்துக்கான அணுகல்

உலகளாவிய ரீதியில், பெண் விவசாயிகளின் உற்பத்தித்திறன் அவர்களின் ஆண் இணைகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவு குறைவானதாகக் காணப்படுவதுடன் இது 2 - 30% பால்நிலை விளைவு இடைவெளியினையும் உருவாக்குகின்றது. இந்தப் பால்நிலை இடைவெளியின் இருப்புக்குப் பின்னால் இருக்கும் பிரதான ஊக்கிகள் போதிய விதத்தில் தீர்க்கப்பட்டால், கிட்டத்தட்ட 36 மில்லியன் மக்களைப் பட்டினியில் இருந்து மீட்க முடியும் (IFAD, 2014). பெண் விவசாயி ஒருவருக்குத் தொழில்நுட்ப அணுகல் இல்லாமல் இருப்பது விவசாய உற்பத்தித்திறனில் அவரின் ஊழியத்தின் உச்சபட்சப் பயன்பாட்டினைத் தடுக்கும் பிரதான தடையாகக் காணப்படுகின்றது.

பால்நிலைப் பாகுபாடுமிக்க சமூக நியமங்களின் காரணமாக இலங்கையில் பெண் விவசாயிகள் தொடர்பில் தொழில்நுட்ப அறிவினையும் கருவிகளையும் பரப்புவதில் ஒப்புரவு என்பது தெளிவாகவே இல்லாமல் இருக்கின்றது. பெண் விவசாயிகள் விவசாய உபகரணங்களுக்கான அணுகலை அரிதாகவே கொண்டுள்ளனர் என்பதையும் ஒட்டுமொத்தமாக ஆண் விவசாயிகளுடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு குறைவான கருவிகளையே சொந்தமாகக் கொண்டுள்ளனர் என்பதையும் சூழ்நிலைச் சான்றுகளும் களமட்டக் கண்டுபிடிப்புக்களும் உறுதியாகச் சுட்டிக்காட்டுகின்றன. இதன் காரணமாக நாட்டின் பெண் விவசாய ஊழியப் படையினர் அடிப்படையில் திறனற்ற ஊழியத்தில் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளதுடன் அதிகமான சந்தர்ப்பங்களில் ஊழியத்தினை அதிகம் தேவைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு அடிப்படை உற்பத்தியாளர்கள் என்ற ரீதியில் உணவுப் பெறுமதிச் சங்கிலிகளில் கீழ் மட்டங்களிலேயே இடம்பிடித்து வருகின்றனர்.

பெண் விவசாயிகளுக்கு உதவுவதற்கெனக் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட விவசாய விரிவாக்கல் சேவைகளும் மரபுரீதியான பால்நிலை நியமங்களுக்குள் கட்டுண்டு கிடக்கின்றன. பெண் விவசாயிகளுக்கு குடும்பப் போ'ாக்கு, குடும்ப உணவுப் பாதுகாப்பு, பெண் விவசாயிகள் சங்கத்தினை உருவாக்கல் தொடர்பான விடயங்களிலேயே பயிற்சி வழங்கப்படுகின்றது (விவசாயத் திணைக்களம், 2014). கமநல சேவை நிலையங்களின் கீழ் பதிவுசெய்துள்ள விவசாயிகள் தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சியினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், கமநல சேவை நிலையத்தில் பதிவுசெய்வதற்கு, விவசாயி காணி உரிமையாளராக இருக்கவேண்டும் என்பது ஒரு முன்நிபந்தனையாகும் என்பதுடன் பெரும்பான்மையான பெண் விவசாயிகள் இந்தத்

தேவைப்பாட்டினை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றனர். இது பெண் விவசாயிகள் அவர்களின் தொழில்நுட்ப ஆற்றலை மேலும் விருத்தி செய்வதில் இருந்தும் அவர்களைத் தூரமாக்குகின்றது.

விவசாய அமைச்சின் முகாமைத்துவத்தின் கீழ் வரும் அநுராதபுரத்தில் உள்ள பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றினால் விநியோகிக்கப்பட்டுள்ள பதிவுகளின் படி, 2015 - 2018 காலப்பகுதியில் பயிற்றப்பட்ட விவசாயிகளின் மத்தியில் **10%** பெண் விவசாயிகளாக இருக்கின்றனர் (FAO, 2018). தொழில்நுட்ப அணுகல் இல்லாமையானது பெண் விவசாயி தனது உற்பத்தித் திறனை அதிகரிப்பதையும் சந்தைகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட அணுகலைப் பெற்றுக்கொள்வதையும் தடுப்பதுடன் தனது ஒட்டுமொத்த இழப்பினைக் குறைப்பதற்காகப் பெறுமதிச் சங்கிலிகளில் செயற்திறன்மிகு முறையில் பங்குபற்றுவதையும் தடுக்கின்றது.

## 2.5 பராமரிப்புப் பொறுப்புக்கள்

இலங்கையில் பெண்களின் வேலைவாய்ப்பின்மை வீதங்கள் அனைத்து வயது மட்டங்களையும் சேர்ந்த ஆண்களைவிட இரட்டிப்பானதாகும். கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்ப ஊழியத்தில், குறிப்பாக விவசாயத்தில் கணிசமான எண்ணிக்கையில் பொருளாதார ரீதியாக முனைப்பான பெண்கள் செறிந்திருக்கின்றனர் (ஆசிய அபிவிருத்தி வங்கி, 2015). பெண்களின் உற்பத்தித்திறன் பொறுப்புக்களையும் இனப்பெருக்கப் பொறுப்புக்களையும் கருத்தில் கொள்கையில், கிராமியப் பெண்கள், குறிப்பாகப் பெண் விவசாயிகள் அவர்களின் ஆண் இணைகளுடன் ஒப்பிடுகையில் நாளொன்றுக்கு அதிக மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர்.

விவசாயத் துறையினுள் நிலவும் பால்நிலைச் சமத்துவமின்மைகளை மிகவும் சான்றாகக் காணக்கூடியதாக இருப்பதுடன் அவற்றின் அளவுகளைத் தீர்மானிப்பது கடினமானதாக உள்ளது. கொடுப்பனவு செலுத்தப்படாத பராமரிப்புப் பணிகளிலும் வீட்டு வேலைகளிலும் பெண்கள் செறிந்துள்ள காரணத்தினாலும் சீவனோபாய விவசாயத்தில் அவர்களின் வகிபாத்திரம் பொதுவாகக் கொடுப்பனவு செலுத்தப்படாததாக இருப்பதாலும் கிராமியப் பொருளாதாரத்திற்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு பரந்த அளவுக்கு அறிக்கையிடப்படுவதில்லை (சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், 2018).

'வீட்டு வேலைகளிலும் விவசாய நடவடிக்கைகளிலும் பெண்கள் உதவுகின்றனர். பெண்களின் பொருளாதார அபிவிருத்தியானது அதிகரித்த வீட்டு வேலைகளின் காரணமாகப் பல்வேறு வழிகளில் பாதிக்கப்படுகின்றது. எனவே 'இந்த விடயங்களில் குடும்ப மட்டங்களிலும் சமுதாய மட்டங்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்' -எனும் கருத்தினையே கொடுப்பனவு செலுத்தப்படாத பராமரிப்புப் பணிகளை அங்கீகரிக்குமாறு அழைப்புவிடுக்கும் தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த பெண் விவசாயிகள் வெளிப்படுத்தினர்.

இலங்கையில் பெண் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள வாய்ப்புக்கள், குறிப்பாக விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள வாய்ப்புக்கள் அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தொடர்ச்சியான சமூகப் பொறுப்புக்கள் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. விவசாயத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் கீழறுக்கப்படுகின்றது - பொதுவாகப் பெண்களும் அவர்களுடன் தொடர்புடைய சமுதாயங்களும் சீவனோபாய விவசாயத்தில் அவர்கள் முன்னணி வகிபாத்திரத்தினை வகிக்கின்ற போதிலும், நடுகை, களையெடுத்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்ற ஏனைய பணிகளின் மத்தியில் விவசாய வகிபாத்திரங்களில் அவர்களின் ஈடுபாட்டினைத் தாண்டி அவர்கள் தம்மை விவசாயிகளாக அடையாளப்படுத்துவதில்லை.



# 03

# கொள்கை இடைவெளிகளும் பரிந்துரைகளும்

தேசிய விவசாய, பொருளாதார மற்றும் கிராமிய அபிவிருத்திக் கொள்கைகளினுள் பால்நிலை பெரும்போக்காக்கப்படுவது இன்றியமையாததாகும். பெண் விவசாயிகளின் பயன்படுத்தப்படாத ஆற்றல் தொடர்பாகவும் நாட்டின் சீர்குலைந்துள்ள உணவு முறைமையினைத் தூக்கிநிறுத்துவதற்கான தீர்வின் ஒரு பகுதியாக அவர்களை அங்கீகரிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் ஒரு பகிரங்கச் சொல்லாடல் உருவாக்கப்பட வேண்டும். இலங்கையில் பெண் விவசாயிகள் எதிர்நோக்கும் தடைகளை அகற்றுவதற்காக பதிற்செயற்பாடாற்றி மிகவும் வினைத்திறனுடன் பரிகார நடவடிக்கைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினை இயலுமாக்கும் நோக்கத்துடன் விவசாயத்தில் பால்நிலைப் பிரச்சினைகளை, குறிப்பாக பெண் விவசாயிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கொள்கை வகுப்போரினதும் அரசாங்க அதிகாரிகளினதும் ஆற்றல்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆண் விவசாயிகளைப் போன்றே பெண் விவசாயிகளுக்கு வளங்களுக்கான அதே வாய்ப்புக்களும் அணுகலும் வழங்கப்பட்டால் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் மிக அதிகமானதாக இருக்கும் என்பதை நிரூபிப்பதற்குப் போதிய உலகளாவிய சான்றுகள் உள்ளன. விவசாயத் துறைக்கும் உணவு உற்பத்திக்கும் பெண் விவசாயிகள் வழங்கும் பங்களிப்பினைக் குறைவாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினாலும் அதனைக் கீழறுக்கின்ற காரணத்தினாலும் உற்பத்தித்திறனில் ஏற்படும் இழப்பு மற்றும் கிடைக்கக்கூடிய வருமானத்தில் ஏற்படக்கூடிய இழப்பு மதிப்பிடப்பட வேண்டும். இலங்கையில் பெண் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரதான தடைகளை அகற்றுவதற்கு இறுக்கமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அளக்கக்கூடிய படிகளை எடுப்பதற்கும் தேசிய மட்டக் கொள்கை வகுப்போருக்கு அழுத்தம் வழங்க மேற்குறிப்பிடப்பட்ட கணக்கீட்டின் அளக்கக்கூடிய விளைவுகளை இந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பயன்படுத்த முடியும்.

## பரிந்துரைகள்

பின்வருவனவற்றினை உறுதிப்படுத்தும் எமது உணவு முறைமையின் பூரணமான நிலைமாற்றம்:

- சூழியல் ரீதியாக உறுதியான மற்றும் நிலைபேறான முறைகள் மூலம் உற்பத்திசெய்யப்படும் ஆரோக்கியமான மற்றும் கலாசார ரீதியாகப் பொருத்தமான உணவுக்கான மக்களின் உரிமை,
- தமது சொந்த உணவு மற்றும் விவசாய முறைமைகளை வரைவிலக்கணம் செய்வதற்கான சிறு அளவிலான உற்பத்தியாளர்களின் உரிமை, கார்ப்ரேட் நலன்களை விட உற்பத்தியாளர்களினதும் நுகர்வோரினதும் இயற்கையினதும் தேவைகளை முன்னுரிமைப்படுத்தும் அரசியல் முறைமை.
- உணவு உற்பத்தி முறைமைகளில் விவசாயச்சூழியல் அடிப்படையிலான அணுகுமுறை

இயற்கை வளங்களுக்கான பெண் விவசாயிகளின் அணுகல் மற்றும் அவற்றின் மீதான அவர்களின் கட்டுப்பாடு, காணி, நிதிச் சேவைகள், சந்தைகள், தொழில்நுட்பம் மற்றும் பராமரிப்புப் பணியின் மீள் விநியோகம் தொடர்பான தீர்மானம் வகுக்கும் சக்தி ஆகியவற்றினை அதிகரிப்பதன் மூலம் எமது உணவு முறைமையில் பெண்களால் அவ்வாறான ஒரு நிலைமாற்றத்தினை உருவாக்க முடியும்.

பிரதான இலக்குவைக்கப்பட்ட பரிந்துரைகள் பின்வருவனவாகும்,

- பெண்களின் காணி உரிமைகளைப் பாதிக்கின்ற மற்றும் வளங்களுக்கான அவர்களின் அணுகலைப் பாதிக்கின்ற பால்நிலைப் பாகுபாடுமிக்க சட்டக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளைத் திருத்தல்.
- பெண்கள் தலைமை தாங்கும் கூட்டுறவுகள் மற்றும் ஏனைய கூட்டு உற்பத்திகளுக்கும் பெண் உற்பத்தியாளர்களினால் தலைமை தாங்கப்படும் சந்தைப்படுத்தல் முன்னெடுப்புக்களுக்கும் உதவி வழங்கல்
- பெண் உற்பத்தியாளர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தீர்மானம் மேற்கொள்வதற்கும் சந்தைகள், அரசியல் தளங்கள் மற்றும் விநியோகச் சங்கிலிகளில் இயலுமாக்கும் பரப்புக்களை உருவாக்கல்.
- விதைகளைப் (பாரம்பரிய வகைகள் உள்ளடங்கலாக) பயன்படுத்துவதற்கும் சேமிப்பதற்கும் பரிமாற்றுவதற்குமான பெண்களின் உரிமையினைப் பாதுகாத்தல் மற்றும் விவசாயிகளின் விதை உரிமைகளை மீறுகின்ற எவ்விதமான சட்ட ஏற்பாடுகளையும் இயற்றுவதைத் தவிர்த்தல்.
- பெண்களின் தலைமையிலான விவசாயச்சூழியல் பயிர்ச்செய்கை, ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவைகளுக்கு உதவியளித்தல்.
- பெண் விவசாயிகளின் ஆற்றலைக் கட்டியெழுப்பல் மற்றும் விதைகளின் பாதுகாப்பு, பாரம்பரிய அறிவினை மாற்றல் ஆகியவற்றினைப் பெண்கள் பொறுப்பேற்பதற்கு உகந்த சூழலை உருவாக்கல் மற்றும் கூட்டுறவுகள், சந்தைகள் மற்றும் சமூக இயக்கங்கள் மூலம் கூட்டு நடவடிக்கை.
- நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கல் மற்றும் பெண் விவசாயிகளின் தொழில் முயற்சியாண்மைத் திறன்களுக்கான ஆற்றலை அதிகரிப்பதற்காக விவசாய விரிவாக்கல் சேவைகளில் இருந்து உதவி பெறல்.

- பெண் விவசாயிகளின் தேவைகளை இலக்குவைத்து போக்குவரத்து வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பினை உருவாக்கல்.

- விவசாயச் சமுதாயங்களில் பெண் விவசாயிகளைத் தலைவர்களாகவும் தொழில் முனைவோராகவும் தீர்மானம் வகுப்போராகவும் சித்தரிக்கின்ற மேலும் சந்தை முறைமைகளில் பங்கீடுபாட்டாளர்களாகச் சித்தரிக்கின்ற மற்றும் சாத்தியமுள்ள கொள்வனவாளர்களாகச் சித்தரிக்கின்ற பிரச்சாரங்களை முன்னெடுத்தல்.

- பெண் விவசாயிகளைக் குறிப்பாக இலக்குவைத்து நீண்ட மீள்கொடுப்பனவுக் காலப்பகுதிகளுடன் குறைந்த வட்டியுடனான கடன் திட்டங்களை உருவாக்கல்.

- சகல தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பெண் விவசாயிகளின் பங்கேற்பு கட்டாயமான தேவைப்பாடாகக் குறித்துரைக்கப்பட வேண்டும்.

- பால்நிலைப் பாகுபாடுமிக்க மனப்பாங்குகளை நிலையான உள எண்ணங்களாக மாற்றும் மற்றும் வேலைகளை ஆண்களின் வேலைகள் என்றும் பெண்களின் வேலைகள் என்றும் தவறாக வகைப்படுத்தும் சமூக நியமங்களை அகற்றுவதற்கு விவசாயச் சமுதாயங்களையும் விவசாயப் போதனாசிரியர்களையும் கூருணர்வுடையோராக்கல்

- பயன்படுத்த இலகுவான தொழில்நுட்பத் திட்டங்களைப் பெண் விவசாயிகளுக்காக அறிமுகப்படுத்தல்.

- பெண் விவசாயிகளின் மத்தியில் பராமரிப்புப் பணிகளை அங்கீகரித்து மீள்விநியோகிப்பதனை மேம்படுத்துவதற்காக அரசாங்கப் பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியிலும் அபிவிருத்தி முகவர்களுக்கு மத்தியிலும் கொள்கைக் கலந்துரையாடல்களை உருவாக்கல்.

பிரிவுகள் 2.1 - 2.5 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட தடைகளைக் களைவதற்கான மேலதிக பரிந்துரைகளை இணைப்பு 03 இல் காணலாம்.



# இணைப்பு 01:

## கலந்தாலோசிப்புக்களில் இருந்து பிரதானமாகக் கண்டறிந்தவைகள்

## மட்டக்களப்பு மாவட்டம்

- விவசாயிகள் என்பது பொதுவாக ஆண்களையே குறிக்கின்றது. ஆண்களின் பெயர்களிலேயே காணி உரித்தாண்மை பொதுவாகக் காணப்படுவதால் அல்லது காணி பதிவு செய்யப்படுவதால் இது உருவாகியுள்ளது. ஆண்கள் கடினமான வேலைகளைச் செய்கையில் பெண்கள் இலகுவான வேலைகளைச் செய்கின்றனர் (களையெடுத்தல் மற்றும் உணவு தயாரித்தல்). ஆண்களே குடும்பத் தலைவர்களாகக் கருதப்படுவதால் ஆண்களிடம் காணி வழங்கப்படுகையில் அது ஆணின் பெயரிலேயே பதிவு செய்யப்படுகின்றது.

- விவசாய நடவடிக்கைகளில் ஆண்களே தீர்மானங்களை வகுக்கின்றனர். விவசாயம் தொடர்பான அதிக அறிவினையும் அனுபவத்தினையும் அவர்கள் தாமே கொண்டுள்ளனர்.

- பாரிய அளவிலான விவசாய நடவடிக்கைகளை ஆண்களே மேற்கொள்கின்றனர். பெண்கள் வீட்டுத் தோட்டங்களில் ஈடுபடுகின்றனர். பாரிய அளவிலான விவசாய நடவடிக்கைகளும் அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகளும் ஆண்களை மையப்படுத்தியதாகவே உள்ளன.

- தமிழ்ப் பெண்கள் விவசாய நடவடிக்கைகளில் ஆண்களுடன் சேர்ந்து வயலில் வேலை செய்யும் அதிக சாத்தியம் காணப்படுகின்றது. ஆனால் முஸ்லிம் பெண்கள் அவ்வாறு செய்வதற்கான சாத்தியம் குறைவானதாகும்.

- அதிகமான பெண்கள் கம்பனிகளால் வழங்கப்படும் பயிற்சி மூலமாக வீடுகளில் சிறு அளவிலான உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, பெண் தலைமைக் குடும்பங்கள் அதிகரித்த அளவில் காளான் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

- பெண் தலைமைக் குடும்பங்கள் சில அரசாங்க நிறுவனங்களிடம் இருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தும் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். இந்த உதவிகள் பெண்களுக்கே வழங்கப்படுகின்றன. பெண்கள் நச்சற்ற உணவினைத் தயாரிக்கின்ற காரணத்தினால் மக்கள் மத்தியில் நச்சற்ற உணவுகளுக்கு அதிக வரவேற்பு இருக்கின்றது.

- கிழக்கு மாகாணத்தில் மத்திய சந்தை இல்லாத காரணத்தினால் மட்டக்களப்பு விவசாயிகள் தம்புள்ளை மத்திய சந்தையிலேயே தங்கியுள்ளனர். அதிகமான மக்கள் விதைகளைப் பெறுவதற்கும் டிரக்டர்களை வாடகைக்குப் பெறுவதற்கும் அல்லது கொள்வனவு செய்வதற்கும் ஏனைய விநியோகங்களைப் பெறுவதற்கும் கம்பனிகளிலேயே தங்கியுள்ளனர். பாரம்பரிய விவசாய முறைகளுக்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டும். இதனால் கம்பனிகளில் தங்கியிருப்பது எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாக இருக்கலாம்.

- போ'ாக்கான உணவினை வழங்குவதில் அதிக கவனத்தினைப் பெண்களே செலுத்துகின்றனர். குறிப்பாகத் தாய்மார்கள் அதிக சிரத்தை எடுக்கின்றனர். பிள்ளைகளுக்குப் பாலூட்டுகையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே வகையான உணவே வழங்கப்படுகின்றது. இவர்களுக்கிடையில் உணவுச் சமத்துவம் பேணப்படுகின்றது.

- வீட்டுத் தோட்டம் செய்யும் பெண்கள் விதைப் பாதுகாப்பிலும் விதைகளைக் களஞ்சியப்படுத்தலிலும் உரத்தினைப் பயன்படுத்துகையிலும் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்துகின்றனர். வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களால் விவசாயிகளுக்கும் உணவுப் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்பட முடியும். பெண்கள் விவசாயத்தின் மூலம் உளவியல் ரீதியாக நன்மையடைகின்றனர். பொதுவாக, பெண்கள் அவர்களின் ஓய்வு நேரத்தில் வீட்டுத் தோட்டம் செய்வதில் ஈடுபடுகின்றனர். இது அவர்களுக்கு மன மகிழ்ச்சியினையும் சௌகரியத்தினையும் வழங்குகின்றது.

## நுவரெலியா மாவட்டம்

- விவசாய நடவடிக்கைகளில் பெண்கள் பிரதான வகிபாத்திரத்தினை வகிக்கின்ற போதிலும் அறுவடைக்குப் பின்னரான தீர்மானங்களை ஆண்களே எடுக்கின்றனர். ஆண்களே விற்பனையினை மேற்கொள்கின்றனர். விற்பனையின் பின்னர் பணமும் ஆண்களின் தற்றுணிபின் பேரிலேயே செலவழிக்கப்படுகின்றது. எஞ்சிய பணம் மட்டுமே மனைவியிடம் வழங்கப்படுகின்றது.

- சந்தைப்படுத்தல் செயன்முறையில் பெண்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர். இதனால் இந்தச் செயற்பாடுகளில் ஆண்களே அதிகமாக ஈடுபடுகின்றனர். பிரதான சந்தைகளுக்குப் பெண்கள் செல்கையில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். சந்தையில் உள்ள ஆண்கள் சரியான விலையினை வழங்குவதில்லை.

- பெண்கள் முழுநேர விவசாயிகள் அல்ல. அவர்கள் தங்களின் அதிகமான நேரத்தினை வீட்டு வேலைகளைச் செய்வதிலும் பிள்ளைகளைப் பராமரிப்பதிலும் செலவிட்டு எஞ்சிய நேரத்தினையே விவசாயத்தில் செலவிடுகின்றனர். விவசாயத்துடன் சேர்த்தே பெண்கள் வீட்டு வேலைகளையும் செய்கின்றனர்.

- இங்கேயுள்ள மக்கள் பெண்களை விவசாயிகளாகப் பார்க்காமையே பெரிய பிரச்சினையாகும். பெண்களின் தலைமைத்துவத்திற்கு உதவி வழங்கக் குடும்ப உறுப்பினர்கள் கட்டாயம் முன்வரவேண்டும். இதன் மூலமாக நாம் நடைமுறையிலும் பெண்களின் வளர்ச்சியிலும் சமத்துவத்தினைக் காண முடியும்.

- பெண்களுக்குப் பொதுவாகக் குறைவாகவே கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. மரக்கறித் தோட்டங்களிலும் நகரப் பிரதேசத்தில் கடைகளிலும் பெண்கள் செய்யும் வேலைகளில் இந்த சூழ்நிலையினைக் காண முடிகின்றது. ஆண்கள் குறைந்த நேரம் வேலை செய்து கூடிய சம்பளங்களைப் பெறுகின்றனர். பெண்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் விவசாயத்தில் உள்ள அதிகமான கடின வேலைகளை ஆண்களே செய்கின்றனர்.

- பெருந்தோட்டப் பெண் தொழிலாளர்களும் இளம் பெண்களும் பல்வேறு வகையான சுரண்டலுக்கும் பாலியல் தொல்லைகளுக்கும் உட்படுகின்றனர். பல்வேறு தொழில்களைப் புரியும் பெண்கள், குறிப்பாக நகரப் பிரதேசத்தில் உள்ள பெண்கள் இவ்வாறு சுரண்டப்படுகின்றனர். எவ்வாறாயினும், இப்பெண்கள் இதற்கான நீதியினைத் தேடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இதற்கான பிரதான காரணம் தங்களின் வேலை இழக்கப்பட்டு விடும் என்ற அச்சமாகும்.

- ஆவணங்கள் எதுவும் இன்றி, பாரம்பரிய உரிமையின் அடிப்படையில் பயிர்செய்யப்படும் நிலங்களைப் பொறுத்த அளவில் பயிர்செய்வதற்கான உரிமை தந்தையிடமிருந்து மகனுக்கு வழங்கப்படும் ஆண் உரிமையாகக் கருதப்படுகின்றது. அதிகமான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணியற்றவர்களாகவே உள்ளனர். பெருந்தோட்டக் கம்பனிகள் மக்களுக்குக் காணிகளை வழங்க விரும்புவதில்லை. மேலும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் உள்ள பொது நிர்வாகக் கட்டமைப்புக்கள் காணி ஒதுக்கீடுகளை இயலுமாக்குவதற்காக எளிமைப்படுத்தப்படவில்லை.

- விவசாயம் தொடர்பான அரசாங்கச் சேவைகள் பெருந்தோட்டப் பிரதேசங்களில் கிரமமாகக் கிடைப்பதில்லை. பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் மக்களுக்கு அவை விழிப்புணர்வினை வழங்குவதில்லை, குறிப்பாக அரசாங்கச் சேவைகள் பற்றி விழிப்புணர்வினை வழங்குவதில்லை. அரசாங்கச் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு பெருந்தோட்ட மக்கள் மத்தியில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

- பெண்களைவிட ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கும் எத்தனிப்பு பெண்களின் மத்தியிலும் காணப்படுகின்றது. ஏனெனில் சொத்துக்களை வாங்கும்போது தங்களின் ஆண்களை முன்னிலைப்படுத்துவதும் குடும்பத்தில் ஆண்களின் தலைமைத்துவத்தினை நிலைநாட்டுவதும் பெண்களே.

- வர்த்தக விவசாய நடவடிக்கைகள் அதிகளவான உரங்களையும் பீடைக்கொல்லிகளையும் பயன்படுத்துகின்றன. எவ்வாறாயினும், தமது குடும்பத் தேவைகளுக்காகப் பெண்கள் சிறிய அளவில் சேதனப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். உணவுப் பாதுகாப்பு மற்றும் அறுவடைக்குப் பின்னரான களஞ்சியப்படுத்தல் தொடர்பாக அதிகளவு கவனக் குவிப்பு இல்லை. அதற்கான ஏற்பாடுகள் இங்கே அமுலில் இல்லை.

## முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள்

காணி உரித்தாண்மை பொதுவாக ஆண்களை மையப்படுத்தியதாக நோக்கப்படுகின்றது. குடும்பத் தலைவரின் பெயரிலும் பொதுவாகக் காணிகள் வழங்கப்படுகின்றன. இங்கே ஆண்களே குடும்பத் தலைமைகளாகப் பார்க்கப்படுகின்றனர். காணிச் சட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. காணி உறுதிகளை வழங்காமை மற்றும் எல்லைப் பிரச்சினைகள் பொதுவானவையாகக் காணப்படுகின்றன. பெண் விவசாயிகளை ஊக்குவித்து அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும்.

பெண் விவசாயிகளுக்கிருக்கும் மிகப் பெரிய பிரச்சினை சந்தை வாய்ப்பு இல்லாமையாகும். வெளியூர்களில் இருந்து வரும் வியாபாரிகள் உற்பத்திகளை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். பொதுவாகப் பெண்களுக்கு அவர்களின் உற்பத்திகளுக்காக நியாயமான விலை கிடைப்பதில்லை. அவர்கள் உற்பத்தி செய்யும் உணவுகளைப் பேணிப் பராமரிக்கப் பாரம்பரிய அறிவினையே பயன்படுத்துகின்றனர். எவ்வாறாயினும், அவர்கள் நவீன தொழில்நுட்பத்தினைப் பற்றி அறியாதவர்களாக இருப்பதால், உணவுப் பாதுகாப்பில் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதில்லை. பயிற்சிகளின் மூலம் நன்மையடைந்து பெண்கள் அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கமுடியும். பயிற்சிக்குப் பின்னரான அவதானிப்புக்களை மேற்கொள்வதன் மூலமும் இதனை நிறைவேற்ற முடியும்.

- பெண்கள் வீட்டு வேலைகளிலும் விவசாய நடவடிக்கைகளிலும் உதவி செய்கின்றனர். அதிகரித்த வீட்டு வேலைகளின் காரணமாகப் பெண்களின் பொருளாதார அபிவிருத்தி பல வழிகளில் பாதிக்கப்படுகின்றது. எனவே இந்த விடயங்களில் குடும்ப மட்டத்திலும் சமுதாய மட்டத்திலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். விவசாய சமுதாயத்தில் ஆண் பிள்ளைகள் அதிக கவனம் எடுத்துப் பராமரிக்கப்படுவதும் செல்லமாக வளர்க்கப்படுவதும் பொதுவானதாகும்.

## மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்

- வீட்டு வேலைகளைப் பெண்கள் முன்னணியில் நின்று நிறைவேற்றுகின்ற போதிலும் பாரிய அளவிலான விவசாய நடவடிக்கைகளில் அவர்கள் முன்னணி வகிப்பதில்லை. ஆண்கள் பொதுவாகக் கடினமான வேலைகளைச் செய்கின்ற அதேவேளை தோட்டவேலை மற்றும் கால்நடை வளர்ப்புப் போன்ற இலகுவான வேலைகளைப் பெண்கள் செய்கின்றனர். மாடு வளர்ப்பிலும் வீட்டுத் தோட்டச் செயற்பாடுகளிலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்களை ஊக்குவிக்கின்றன.

  கிராமங்களில் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுபவர்கள் தமது பிள்ளைகள் விவசாயத்தில் ஈடுபடுவதை விரும்புவதில்லை. மாறாக அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முறையான கல்வியினை வழங்கி நகர்ப்பிரதேசங்களில் அவர்களுக்குச் சிறந்த வாழ்வினை ஏற்படுத்திக் கொடுக்கவே முயற்சிக்கின்றனர். தங்களின் பிள்ளைகளில் குறைந்தது ஒருவரையாவது ஆசிரியராக்குவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். சொற்பமான கிராமத்தவர்களே தலைமுறைகளாக விவசாயம் செய்து வருகின்றனர்.

  கொவிட் 19 பெருந்தொற்றின் காரணமாக வீட்டில் இருக்கும் மக்கள் வீட்டுத் தோட்டம் செய்து வருகின்றனர். ஆனால் இது பெருந்தொற்றின் பின்னரும் தொடர்ந்தால் அது மக்களுக்குப் பெரிய வெற்றியாக இருக்கும். வீட்டுத் தோட்டம் பொதுவாகப் பெண்களுக்கு வருமான மூலமாகப் பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்தவற்றினைப் பயன்படுத்துவது அவர்களுக்குச் சேரவேண்டிய பெறுமதியினைப் பெற்றுத் தருவதில்லை.

- நாள் முழுவதும் வீட்டு வேலைகளைச் செய்வதன் பெறுமதி பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவர்கள் கொடுப்பனவு செலுத்தப்படாத வேலையினைச் செய்கின்றனர். பெண்கள் வேலை தேடுவதையோ அல்லது பயிர்செய்வதையோ குடும்ப உறுப்பினர்கள் விரும்புவதில்லை. பெண்கள் வியாபாரத்தில் ஈடுபட ஆரம்பித்தால், வீட்டு வேலை செய்ய யாருமில்லை, கணவனையும் பிள்ளைகளையும் பார்த்துக்கொள்ள யாருமில்லை என்ற மனப்பதிவினை அவர்கள் ஏற்படுத்துகின்றனர். பெண்கள் வியாபாரத்திற்குச் செல்கையில் வீட்டு வேலைகளுக்குப் பொறுப்பாக இருப்பதற்குக் கணவர்கள் விரும்புவதில்லை.

- அரசாங்க சேவைகள் வழங்கப்படுகையில், ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. உதாரணமாக, கால்நடை இனப்பெருக்கம் பற்றிய ஆலோசனை ஆண்களுக்கே வழங்கப்படுகின்றது.



# இணைப்பு 02:
## இலக்குவைக்கப்பட்ட பரிந்துரைகள்

## 2.1 இயற்கை வளங்களை அணுகலும் அவற்றின் மீதான கட்டுப்பாடும்

- காணிக்கான பெண்களின் உரிமைகளைக் குறிப்பாகப் பாதிக்கும் பால்நிலைப் பாகுபாடுமிக்க சட்ட, கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளைத் திருத்தல்.

- அரசாங்க உதவிச் சேவைகளுக்காகத் தகைமை பெறுவதற்குக் காணி உரித்தாண்மை தேவை எனும் விவசாய விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான நிபந்தனைகளை மறுசீரமைத்தல்.

- கட்டாயமாகக் காணி உரித்தாண்மை இருக்கவேண்டும் என்ற நிபந்தனையில் இருந்து விலகி விவசாயிகள் அமைப்பு மற்றும் நீர்ப்பாசன அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு உறுப்பாண்மையினை வழங்குவதற்கான பொறிமுறையினை மாற்றுதல்.

- முனைப்பான சந்தைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்காக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் மூலம் காணிகளை வழங்குகையில் பெண் விவசாயிகளை முன்னுரிமைப்படுத்தல்.

- அமைச்சரவை மட்டத்தில் இருந்து மாவட்ட மற்றும் பிரதேச மட்டம் வரை அரசாங்க அதிகாரிகள், காணி உரித்தாண்மை மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை அணுகுதல் தொடர்பான முரண்பாடுகளைத் தீர்ப்பதை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

- காணி உரிமையற்ற பெண்களும் விவசாயிகளாகக் கருதப்பட்டு அரசாங்கத்தின் அதே சேவைகளுக்கு உரித்துடையவர்களாக இருப்பதை மேம்படுத்தும் அரச கொள்கைச் சொல்லாடலை உருவாக்கல்.

## 2.2 சந்தைகளுக்கான அணுகல்

- பெண்கள் கூட்டுறவுக்கும் பெண்களினால் நடத்தப்படும் ஏனைய கூட்டுச் சந்தைகளுக்கும் உதவி வழங்கல் பெண் விவசாயிகளின் தொழில்முனைவுத் திறன்களை அதிகரிப்பதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கல் மற்றும் விவசாய விரிவாக்கச் சேவைகளிடம் இருந்து உதவியினை அமுல்படுத்தல்.

- சந்தை முறைமைகள், சந்தைக் கேள்விகள், உற்பத்தி மற்றும் சில்லறை வாய்ப்புக்கள் பற்றிப் பெண் விவசாயிகளுக்கு தகவல்களைப் பரப்பி இற்றைப்படுத்தும் பொறிமுறைகளை நிறுவுதல். இதனையும் விரிவாக்கல் சேவைகள், விவசாய அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கூட்டுறவு மூலம் மேற்கொள்ள முடியும்.

- பெண் விவசாயிகளை இலக்குவைத்து போக்குவரத்து வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்புக்களை உருவாக்கல்

- பெண் விவசாயிகளின் விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கையினை உருவாக்கி சந்தை அடையாளத்தினை உருவாக்கல்.

- விவசாய சமுதாயங்களில் பெண் விவசாயிகளைத் தலைவர்களாகவும் தொழில் முனைவோராகவும் தீர்மானம் வகுப்போராகவும் சித்தரிக்கின்ற மேலும் சந்தை முறைமைகளில் பங்கீடுபாட்டாளர்களாகச் சித்தரிக்கின்ற மற்றும் சாத்தியமுள்ள கொள்வனவாளர்களாகச் சித்தரிக்கின்ற பிரச்சாரங்களை முன்னெடுத்தல்.

- பெண் விவசாயிகளைக் குறிப்பாக இலக்குவைத்துச் சந்தை இணைப்புக்களை உருவாக்கல் (வர்த்தகச் சந்தைகள்).

## 2.3 நிதிச் சேவைகளுக்கான அணுகல்

- கம்பனிகளால் வழங்கப்படும் சகல நியாயமற்ற நுண்கடன்களையும் இரத்துச் செய்தல் எனும் அரசாங்கத்தின் வாக்குறுதியினை நிறைவேற்றல்

- நுண்நிதிக் கம்பனிகளுக்காக இறுக்கமான ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறையினை நிறுவுதல்.

- கடன் வசதிகள் வழங்கப்படுகையில் சந்தைகள் மற்றும் பெறுமதி சேர்க்கைகளுடன் தொடர்புடைய குறைநிரப்பல் தகவல்களையும் சேவைகளையும் வழங்கல்

- பெண்களின் கூட்டுறவு மூலமும் ஏனைய கூட்டு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பொறிமுறைகள் மூலமும் பெண் விவசாயிகளைக் குறிப்பாக இலக்குவைத்துக் நீண்ட மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியுடன் குறைந்த வட்டிக் கடன்களை உருவாக்கல்.

- பெண் விவசாயிகளுக்குக் கிடைக்கும் கடன் வசதிகள் பற்றிய தகவல்களுக்கான இலகுவான அணுகலை இயலுமாக்கல்

- கடன் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட வேண்டிய பிணையுறுதியின் தன்மையினை மாற்றல்.

## 2.4 தொழில்நுட்ப அணுகல்

- சகல தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பெண் விவசாயிகளின் பங்கேற்பு கட்டாயமான தேவைப்பாடாகக் குறித்துரைக்கப்பட வேண்டும்.

- பால்நிலைப் பாகுபாடுமிக்க மனப்பாங்குகளை நிலையான உள எண்ணங்களாக மாற்றுகின்றதும் வேலைகளை ஆண்களின் வேலைகள் என்றும் பெண்களின் வேலைகள் என்றும் தவறாக வகைப்படுத்துகின்றதுமான சமூக நியமங்களை அகற்றுவதற்கு விவசாயச் சமுதாயங்களையும் விவசாயப் போதனாசிரியர்களையும் கூருணர்வுடையோராக்கல

- பயன்படுத்த இலகுவான தொழில்நுட்பத் திட்டங்களைப் பெண் விவசாயிகளுக்காக அறிமுகப்படுத்தல்.

- சமுதாய மட்டப் பிரச்சாரங்கள் / செயற்பாட்டியம் மற்றும் சமூக ஊடகம் மூலமாகப் பெண் விவசாயிகள் தொழில்நுட்ப மதிநுட்பம் வாய்ந்தவர்கள் எனக் கருதப்படும் அடையாளத்தினை மேம்படுத்தல்.

- விவசாய விரிவாக்கல் சேவைகளை வழங்கப் பெண் அதிகாரிகளின் நியமனத்தினை அதிகரித்தல்.

- உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் மேம்படுத்தப்பட்ட பெறுமதிச் சங்கிலிகளில் செயற்திறனுடன் ஈடுபடுவதற்கும் தொழில்நுட்பத்தினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.

## 2.5 பெண் விவசாயிகளின் மத்தியில் பராமரிப்புப் பணிகளை அங்கீகரித்து மீள்விநியோகிப்பதனை மேம்படுத்துவதற்காக அரசாங்கப் பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியிலும் அபிவிருத்தி முகவர்களுக்கு மத்தியிலும் கொள்கைக் கலந்துரையாடல்களை உருவாக்கல்.

- ❖ பராமரிப்புப் பொறுப்புக்களைப் பெண் விவசாயிகள் மீது விகிதாசாரமற்ற முறையில் சுமத்துவதில் இருந்தும் தவிர்ந்திருப்பது பற்றியய பகிரங்கச் சொல்லாடலை உருவாக்கும் அதேவேளை அவர்களின் உற்பத்தித்திறன் மிக்க மற்றும் இனப்பெருக்க ஊழியப் பங்களிப்பினை அங்கீகரித்தல்.

- ❖ வீட்டுவேலைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஆண்களின் ஈடுபாட்டின் அதிகரித்த மட்டத்தினைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தினைப் பற்றி விவசாய சமுதாயங்களை கூருணர்வாக்கல்.

- ❖ குறைந்தது ஒரு பயிர்ச் சுற்றின் போதாவது பாரம்பரிய இனப்பெருக்க மற்றும் பராமரிப்புப் பணிகளில் இருந்து பெண்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காக சமுதாய மட்டத்தில் குறைநிரப்பல் ஆதார முறைமைகளை நிறுவல்

  E.g:- பிள்ளைப் பராமரிப்பு வசதிகளை வழங்கல், உணவு விநியோகப் பொறிமுறைகளை வழங்கல்.



## இணைப்பு 03:
**அசாத்தியங்களைத் தகர்க்கும் பெண் விவசாயிகளின் வெற்றிக் கதைகள்**

## சுதந்திரத்தின் விதைகள்: மொனராகல பெண் விவசாயிகள்

பெருமளவுக்கு அங்கீகரிக்கப்படாவிட்டாலும், உலகம் முழுவதும் பெண் விவசாயிகள் சுதேச விதை வகைகளினதும் பாரம்பரிய விவசாய நடைமுறைகளினதும் பாதுகாவலர்களாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். பல்வேறு மட்டங்களில் எண்ணற்ற தடைகள் போடப்படுகின்றமையினைத் தாண்டி, தமது சொந்தச் சமுதாயங்கள் முதல் பல்தேசியக் கம்பனிகள் வரை பெண் விவசாயிகள் உள்நாட்டு உணவு முறைமையினைத் திடப்படுத்துவதில் தொடர்ச்சியாக மீண்டெழுந்தன்மையினைக் காட்டி வருகின்றனர். சுதேச விதை வகைகளைப் பாதுகாப்பது பெண் விவசாயிகள் தலைமுறைகளாகக் கௌரவிக்கும் அவ்வாறான ஒரு கடப்பாடாகும்.

காலநிலை மாற்றத்திற்குத் தகவமைக்க முடியாத விதைகளை வழங்கும் பெரிய பெரிய கூட்டுத்தாபனங்களில் விவசாயிகள் தங்கியிருப்பதை அதிகரிக்கும் அவற்றின் கலப்பின விதைகளை மேம்படுத்தும் பிரச்சாரத்திற்கு மசியாமல் - இலங்கையில் மொனராகலயைச் சேர்ந்த பெண் விவசாயிகளின் குழுவொன்று 1980 களில் இருந்து சுதேச விதை வகைகளைப் பாதுகாப்பதில் வெற்றிகரமாக இயங்கிவருகின்றது.

ஊவா வெல்லஸ்ச பெண்கள் அமைப்பு (UWWO) மரபுரிமையான விதை வகைகளைப் பாதுகாத்து அவற்றினை விநியோகிக்கும் அதன் முயற்சியினைத் தமது பிரதேசத்தில் சிறந்த விதை வகைகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதை அடையாளம் கண்ட 20 பெண்களுடன் முதலில் ஆரம்பித்தது. அதன் ஆரம்பத்தில், மாதாந்தக் குழக் கூட்டத்தில் பெண்கள் விதைகளைப் பரிமாறிக்கொண்டனர். இது பின்னாட்களில் வளர்ந்து பரிணமித்து இற்றைவரையில் உறுதியான 100 பெண் விவசாயிகளின் உறுப்பாண்மையுடன் 05 விதை வங்கிகளாக மொனராகலயில் நிலைபெற்றுள்ளது.

நாம் உண்ணும் உணவிலுள்ள 75% இற்கும் மேற்பட்ட பயிரினப் பல்வகைமை 1990 - 2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தொலைக்கப்பட்டுவிட்டது என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (FAO, 2010). பல்தேசியக் கூட்டுத்தாபனங்களினால் கலப்பு விதைகளின் மற்றும் மரபணுரீதியாக மாற்றம் செய்யப்பட்ட விதைகளின் மேம்பாடு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளின் சார்பினை முறைமைவாய்ந்த வகையில் அதிகரித்துள்ளதுடன் விவசாய இரசாயனங்களின் பாவனையிலும் தொற்றாநோய்களிலும் கடன்களிலும் ஒட்டுமொத்தமாக அதிகரிப்பினை ஏற்பத்தியுள்ளது.

“விவசாயத்தில் பெண்கள் மிகவும் முனைப்பான வகிபாத்திரத்தினை வகிக்கவேண்டும் என நாம் விரும்புகின்றோம். எமது மாதாந்தக் கூட்டங்களில் நாம் ஆரம்பத்தில் பயற்றை மற்றும் வெண்டிக்காய் ஆகியவற்றுக்கான சுதேச விதை வகைகளைக் கொடுக்கத் தொடங்கினோம். இதனைத் தொடர்ந்து பெண்கள் அவர்களுக்கு மத்தியில் விதைகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் என நாம் ஊக்குவித்தோம். விரைவில் நாம் இரண்டாவது விதைக் காப்பகத்தினை ஆரம்பித்தோம் - மண் பாணைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு தட்டுக்களில் அடுக்கப்பட்ட விதை வகைகள் - இது 1990களின் ஆரம்பத்தில். இது இறுதியில் ஐந்து பூரணமாகச் செயற்படும் விதை வங்கிகள் உருவாகக் காரணமாகியது - என விதைப் பாதுகாப்பு ஸ்தாபக உறுப்பினர் கே பி சோமலதா குறிப்பிட்டார்.

UWWO விதை வங்கிகள் மொனராகல தொடக்கம், அம்பாறை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் வரை தொடர்ச்சியாக விதைப் பரிமாற்ற மார்க்கங்களை உருவாக்கியுள்ளது.

சுற்றாடல் ரீதியாக நீடுறுதியானதும் பெண்களினால் தலைமைதாங்கப்படுகின்றதுமான பாரம்பரிய விவசாய நடைமுறைகளுக்கு உதவும் தொலைநோக்குடன் UWWO தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. ஸ்தாபக உறுப்பினர்கள் அவர்களின் அனுபவங்களை மேலும் குறிப்பிடுகையில், விவசாயச் சமுதாயங்களில் காணப்படும்

இறுக்கமான ஆணாதிக்கக் கட்டமைப்புக்களின் மத்தியில் தலைமைத்துவத்தினையும் தீர்மானம் வகுத்தல் வகிபாத்திரத்தினையும் எடுப்பது பெண்களுக்குக் கடினமானது என்பது வெளிப்படுத்தப்பட்டது. மொனராகலயில் விவசாயத்தில் பெண் விவசாயிகளை முன்னணிக்குக் கொண்டு வருவதற்கு ஒரு சாதகமான நிலைமாற்றத்தினை உருவாக்குவது தொடர்பில் இரண்டு உபாயமார்க்க அணுகுமுறைகள்

1. பெண் விவசாயிகளின் மத்தியில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தினைப் பதியவைத்தல்: சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காத பயிர்ச்செய்கை தொடர்பான அதிகரித்த தொழில்நுட்ப ஆற்றல் சிறந்த பயிர்ச்செய்கை நடைமுறைகளைப் பயன்படுத்துமாறு தமது சொந்தக் குடும்பங்களை ஊக்குவிப்பதற்கான மாற்ற முகவர்களாக இருப்பதற்குப் பெண்களை அனுமதித்துள்ளது. பெண்கள் எந்த அளவு அதிகமாக அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டவர்களாக உள்ளனரோ, அந்த அளவு அதிகமாக அவர்கள் தீர்மானம் வகுத்தலில் சம்பந்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2. பொருளாதார ஈடுபாடு மற்றும் வருமானப் பிறப்பாக்கத்திற்கான வாய்ப்புக்களை உருவாக்கல்: பெண் விவசாயிகளுக்கான சந்தை இணைப்புக்களையும் சந்தைகளுக்கான அணுகலையும் உருவாக்கி பெறுமதிச் சங்கிலியில் மேலே நகர்வதற்கான வாய்ப்புக்களை வழங்கல்.

விதைப் பாதுகாப்பு முன்னெடுப்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சி, படிப்படியாக விதைப் பாதுகாப்பு இயக்கமாகப் பரிணமித்து பின்னாட்களில் ஒருங்கிணைக்கப்பட்ட வியாபார மாதிரியாக மாறிப் பெண் விவசாயிகளை உற்பத்தியாளர் குழக்களாக ஒருங்கிணைத்து அவர்களைச் சந்தைகளுடன் இணைத்தது. பெண் விவசாயிகள் வெறுமனே அடிப்படை உற்பத்தியாளர்கள் என்ற வகிபாத்திரத்தினை வகிப்பதற்கு அப்பால், அவர்களைப் பெறுமதிச் சங்கிலியில் மேலே முன்னகர்த்துவதையும் இந்தத் தொலைநோக்கின் ஒரு பகுதி கொண்டிருந்தது. இரசாயன உரங்கள் சேர்க்காது பழங்கள், மரக்கறிகள் மற்றும் கீரைகளை உறுப்பினர்கள் உற்பத்தி செய்கையில் பங்கேற்புமிகு உத்தரவாத முறைமையின் (PGS) மூலம் சேதனச் சான்றுப்படுத்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்தப் பெறுமதி சேர்க்கையுடன் பெண் விவசாயிகளினால் தொழில்முனைவோருக்குரிய வகிபாத்திரத்தினை எடுக்கக்கூடியதாக இருந்தது - அவர்களின் நடப்பு நுகர்வோர் தளம் ஊவா மாகாணத்தில் வழமையான விவசாயிகளின் சந்தைகளை மிகைத்துள்ளது. புதிய தொழில்நுட்பங்களின் உதவியுடன், UWWO அதன் பெண் விவசாயிகள் உறுப்பினர்களின் சார்பில் தற்போது முகநூல் மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் சேதன மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கான விற்பனைக் கட்டளைகளைப் பொறுப்பேற்று வருகின்றது. அன்றிலிருந்து மொனராகலயைச் சேர்ந்த பெண் விவசாயிகளின் உற்பத்தியாளர் குழக்கள் பரந்த வாடிக்கையாளர் தளத்தினை அடையக்கூடியதாக இருந்து வருவதுடன் புத்தம் புதிய சேதன உற்பத்திக்கான அதிகரித்த தேவையினையும் ஈடுசெய்து வருகின்றது.

மொனராகலயில் பெண்களின் தலைமையிலான இந்த விதைப் பாதுகாப்புப் பொறிமுறையின் உருவாக்கம் பெண் விவசாயிகளுக்கு அவர்களின் சமுதாயத்தில் பல்வேறு வழிகளில் அதிகாரத்திற்கும் அங்கீகாரத்திற்குமான வழிகளை உருவாக்கியுள்ளது - இதனால் பொருளாதார ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் சுற்றாடல் ரீதியாகவும் பயன் கிடைத்துவருகின்றது.

## பிரதான சாதகமான தாக்கங்கள்:

- கலாசாரங்களுக்கு இடையிலான கூட்டொருமையினைப் பேரீத்தல்: UWWO இனால் நடத்தப்படும் விதை வங்கிகள் நாடு முழவதும் விவசாயிகள் குழக்களுடன் விதைகளைப் பகிர்வதில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றது. விதைகளைப் பரிமாறுவது விவசாயிகள் குழவின் பாரம்பரிய அறிவினை வெவ்வேறு பிராந்தியங்கள் வழியே பரிமாறுவதை இயலுமாக்கி, பயிர்ப் பல்வகைமையினை அதிகரித்து வெவ்வேறு இனத்துவங்களைச் சேர்ந்த விவசாயிகளின் மத்தியில் கூட்டொருமையினை வலுப்படுத்துகின்றது.

- காலநிலை மீண்டெழுந்தன்மைக்கு உதவுதல்: சுதேச விதை வகைகள் உயர் காலநிலை மீண்டெழுந்தன்மை கொண்டவை என்பதுடன் ஒப்பீட்டளவில் குறைந்த நீரையே தேவைப்படுத்துகின்றன. அத்துடன் பீடைகளின் தாக்குதலுக்கும் அதிக எதிர்ப்புச் சக்தியினைக் கொண்டுள்ளன. மரபுரிமையான விதைகளின் பயிர்ச்செய்கை வெற்றிகரமான காலநிலைத் தகவமைத்தல் பொறிமுறையாக நிரூபிக்கப்பட்டிருப்பதுடன் காலநிலை மாற்றம் மற்றும் அதன் மோசமான விளைவுகளால் விவசாயிகள் பாதிக்கப்படுவதையும் குறைக்கின்றது

- பெண்களின் தலைமைத்துவத்தினை வலுப்படுத்தல்: தொழில்நுட்ப அறிவின் இயலளவு அதிகரிப்பு மற்றும் பொருளாதார ஈடுபாட்டிற்கான வாய்ப்புக்களை உருவாக்கல் மற்றும் அதிகரித்த வருமானம் ஆகியவை பெண் விவசாயிகள் தலைவர்களாகவும் நிபுணர்களாகவும் தொழில் முனைவோராகவும் புலனுணரப்படப் பங்களிப்பு வழங்கியுள்ளது. இந்த அங்கீகாரமும் ஏற்றுக்கொள்ளலின் மட்டமும் விவசாயத் துறையில் ஆணாதிக்க சமூக நியமங்களை அகற்றுவதற்கு இயலுமாக இருந்துள்ளதுடன் பெண் விவசாயிகள் அவர்களின் பயிரச்செய்கை தொடர்பாகவும் அறுவடை தொடர்பாகவும் தீர்மானம் வகுத்தல் செயன்முறைக்குத் தலைமை தாங்குவதற்கும் வழியேற்படுத்தியுள்ளது.

- **நீடுறுதியான பயிர்ச்செய்கை நடைமுறைகளை மேம்படுத்தல்:** பெண் விவசாயிகளின் இந்த உற்பத்தியாளர் குழக்கள் மரபுரிமையான விதை வகைகளைப் பாதுகாப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர் என்பதுடன் ஆகக்குறைந்த விவசாய உள்ளீடுகளுடன் சுதேச விதைகளின் பயிரச்செய்கையானது உயர்விளைச்சலைப் பெற்றுத்தருகின்றது என்தை எடுத்து விளக்குவதற்கும் சேவையாற்றுகின்றனர். மொனராகலயைச் சேர்ந்த இந்தப் பெண்கள் நீடுறுதியான விவசாய நடைமுறைகளின் பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியான நன்மைகளின் முனைப்பான ஆதரித்து வாதாடுனர்களாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர்.

- **புதிய சந்தைகளுக்கான அணுகலை உருவாக்கல்:** பெண் விவசாயிகளை முகநூல் மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் நுகர்வோருடன் ருறுறுமு இணைத்து வருகின்றது. இது சமூகப் பிரக்ஞையுள்ள நுகர்வோர்கள் பெண் விவசாயிகளுடன் நேரடியாக இணைவதனை மாத்திரம் இயலுமாக்காமல் பரந்த சந்தை அணுகலையும் வசதிப்படுத்துகின்றது. விற்பனை மையங்களும் / பௌதிக சந்தைத் தளங்களும் ருறுறுமு அலுவலக வளாகங்களிலும் ஊவா மாகாணத்திலும் கொழும்பிலும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. தமது உற்பத்திக்குச் சேதனச் சான்றுப்படுத்தலைப் பெற்றுக்கொள்வது பரந்த சந்தைகளை அணுகுவதற்கான இப்பெண்கள் குழக்களின் ஆற்றலை அதிகரித்துள்ளது.

## நிலைமாற்றத்திற்குத் தயாராக இருத்தல்: மட்டக்களப்புப் பெண் விவசாயிகள்

பெண்கள் அவர்களின் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளில் அல்லது வாழ்வாதாரச் செயற்பாடுகளில் தொழில்நுட்பத்தினை அணுகுவதையும் பயன்படுத்துவதையும் பால்நிலைப் பாகுபாடுமிக்க சமூக நியமங்கள் தடுக்கின்றன. உலகளாவிய ரீதியில், ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண் விவசாயிகளின் உற்பத்தித்திறன் குறிப்பிடத்தக்க அளவு குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் 20-30% எனும் பால்நிலை விளைவு இடைவெளி உருவாகுகின்றது (IFAD, 2014). விவசாயக் கருவிகளை அணுகமுடியாமல் இருப்பது விவசாய உற்பத்தித்திறனில் பெண் விவசாயிகள் அவர்களின் ஊழியத்தின் உச்சபட்ச பயன்பாட்டினைப் பெறுவதற்கான பாரிய தடையாக உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

பெண் விவசாயிகளின் மத்தியில் விவசாயக் கருவிகளையும் தொழில்நுட்ப அறிவினையும் பரப்புவதில் ஒப்புரவின்மை இல்லாமல் இருப்பதை அகற்றும் முயற்சியியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காவியா எனும் பெண்கள் இயக்கம் பெண்களுக்கு விவசாயக் கருவிகளையும் தொழில்நுட்ப அறிவினையும் வழங்கும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. விவசாயத்தினில் நுழைவதற்கு முன்னர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிராத பெண்கள் மத்தியில் இது ஆர்வத்தினைத் தூண்டியிருப்பது இதன் முக்கியமான பலாபலனாகும்.

“பெண் விவசாயிகளின் அதிகரித்த உற்பத்தித் திறனையும் சந்தைகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட அணுகலையும் பெறுமதிச் சங்கிலிகளில் செயற்திறன்மிக்க பங்கேற்பினையும் ஒட்டுமொத்த இழப்புக்களைக் குறைப்பதையும் விவசாயக் கருவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது பாதிக்கின்றது. பெண் விவசாயிகள் அவர்களின் விவசாய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதை நாம் ஊக்குவிக்க விரும்பினோம். அதே நேரத்தில் அதிகமான பெண்கள் அவர்களின் வாழ்வாதாரமாக விவசாயத்தில் ஈடுபடுவதற்கான உகந்த சூழலையும் நாம் உருவாக்க விரும்பினோம். எமது பிரதேசத்தில் பல குடும்பங்கள் அவர்களின் காணிகளைப் பயன்மிக்க முறையில் பயன்படுத்தாமையினை நாம் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். அவர்களின் வீட்டுத் தோட்டங்களில் பயிர்செய்வதற்கான இடம் இருக்கின்றது. ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. அதிகமான குடும்பங்களில் பெண்களுக்கு அளப்பரிய ஆற்றல்கள் இருந்தபோதிலும் அவர்கள் சமையலிலும் துப்பரவுப் பணிகளிலும் மாத்திரமே ஈடுபடுகின்றனர். இந்தக் கட்டத்திலேயே இலக்குவைக்கப்பட்ட இடையீட்டுக்கான தேவை இருப்பதை நாம் உணர்ந்தோம்.” எனக் காவியாவைச் சேர்ந்த Ms. ரதி குறிப்பிட்டார்.

பிரதேசத்தில் பெண் விவசாய ஊழியப் படை பொதுவாகத் திறனற்ற, நேரத்தினை அதிகம் எடுக்கின்ற மற்றும் உழியத்தினை அதிக அளவு தேவைப்படுத்துகின்ற பணிகளிலேயே ஈடுபட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்ட இடையீடு அடையாளம் கண்டுள்ளது. இது அவர்கள் பெறுமானச் சங்கிலியின் மிகவும் அடிமட்டத்தில் இடம்பெறுவதற்கு மாத்திரமே அனுமதியளித்துள்ளது. பெண் விவசாயிகளுக்கு உதவுவதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள விவசாய விரிவாக்கல் சேவைகளும் மரபுரீதியான பால்நிலை நியமங்களால் கட்டுண்டு கிடக்கின்றன என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. குடும்பப் போ'ாக்கு, குடும்ப உணவுப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களிலேயே பெண் விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படுகின்றது (விவசாயத் திணைக்களம் 2014). குறிப்பிடத்தக்க வெற்றியுடனான இந்த இடையீடு, மட்டக்களப்பில் கோரளைப் பற்று, மன்முனை மேற்கு மற்றும் ஏறாவூர் பற்று எனும் மூன்று பிரதேசங்களில் வாழும் பெண் விவசாயிகள் எதிர்நோக்கும் கட்டமைப்பு ரீதியான மற்றும்

கலாசார ரீதியான தடைகளைத் தொடர்ச்சியாக அகற்றுவதற்காக இற்றைவரை 300 இற்கும் அதிகமான பெண் விவசாயிகளுடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றது.

பெண் விவசாயிகளுக்கு நீடுறுதியான மற்றும் ஆக்கபூர்வமான மாற்றத்தினை ஏற்படுத்தும் இந்த முன்னெடுப்பில் வெற்றி காண்பதற்கு மூன்று பிரதான உபாயமார்க்கங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன

1. விவசாய உபகரணங்களையும் தொழில்நுட்ப அறிவினையும் பரப்பல்: ஆண்கள் ஆதிக்கம் செய்யும் பரப்புக்களினுள்ளும் பணிகளிலும் நுழைந்து பணியாற்றுவதற்காகப் பெண் விவசாயிகளை வலுவூட்டுவதன் மூலம் விவசாயத்தில் பாதகமானதும் பால்நிலை ரீதியாக நிலையானதுமான மன எண்ணங்களை அகற்றல்

2. அரசாங்க அதிகாரிகளுடன் இணைப்புக்களை உருவாக்கல்: பிரதேசத்தில் விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றும் விவசாய அதிகாரிகளினால் விவசாயக் கருவிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு பற்றி ஆற்றல் உருவாக்க முன்னெடுப்புக்களும் பயிற்சியும். இந்த இணைப்புக்களும் சாதகமான இடையீடுகளும் பெண் விவசாயிகளினால் வேறு விதமாக அடையமுடியாத அரசாங்க விரிவாக்கல் சேவைகளை அடைவதற்கான அணுகல் பாதைகளை இயங்கச்செய்யும்.

3. பெண் விவசாயிகள் மத்தியில் கூட்டுறவினை உருவாக்கல்: பெண் விவசாயிகளைக் கூட்டுறவுக் குழக்களாக ஒழுங்கமைப்பது அவர்கள் பரந்த சந்தைகளை அணுகுவதற்கும் கூட்டாக உயர் பேரம்பேசல் சக்தியினையும் பேச்சுவார்த்தைச் சக்தியினையும் அடைவதற்கும் அவர்களை இயலுமாக்குகின்றது. கூட்டுறவுகளால் விவசாய முயற்சிகளின் நீடுறுதித்தன்மை உறுதிப்படுத்தப்படுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த முயற்சிகள் நுண்கடன்களுக்கான அணுகலை அனுமதிக்கின்றது, பகிரப்பட்ட வருமானத்தினை இயலுமாக்குகின்றது மற்றும் அறிவினையும் தகவல்களையும் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் பரப்புவதற்கான வழியினைத் திறக்கின்றது.

இந்த முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து சுற்றாடல் ரீதியாக நீடுறுதியான விவசாய நடைமுறைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன - 300 பெண் உற்பத்தியாளர்களும் சேதனப் பயிர்ச்செய்கையிலும் இரசாயனமற்ற பயிர்ச்செய்கையிலும் மட்டுமே ஈடுபட்டுவருகின்றனர். தனிப்பட்ட பெண் விவசாயிகளுக்கும் பெண் விவசாயிகளின் கூட்டுறவுகளுக்கும் வழங்கப்படும் உதவி பிரதேசத்திலுள்ள அரசாங்க விவசாய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் பிரதானமாக வசதிப்படுத்தப்படுகின்றன - சேதனப் பசளையினை வழங்குவது முதல் தொழில்நுட்ப அறிவு மற்றும் உபகரணங்களை வழங்குவது வரையான உதவிகள். இரண்டாம் நிலை நன்மையாக, அரசாங்க விவசாய அதிகாரிகள் பெண் விவசாயிகளுடன் நல்லுறவினை உருவாக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இதேபோன்று, பெண் விவசாயிகளுக்குப் பாதுகாப்பான நிதிச் சேவைகள் தேவைப்படுகையில் பெண் விவசாயிகள் அவற்றினை அணுகுவதை இயலுமாக்க உள்ளூர் வங்கிகளுடன் இணைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெண் விவசாயிகளின் மத்தியில் ஒத்திசைவும் ஒருங்கிணைப்பும் மிக்க உதவிப் பொறிமுறையினை உருவாக்கியமை மட்டக்களப்பில் பால்நிலை ரீதியாக நிலையான எண்ணங்களுக்கு மாறான கருத்துக்களுக்கு இட்டுச்சென்றுள்ளதோடு மாத்திரமன்றி தனிப்பட்ட மட்டத்திலும் சமுதாய மட்டத்திலும் பெண் விவசாயிகளுக்குப் பரந்த வீச்சிலான அடைவுகளுக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளது:

## பிரதான சாதகமான தாக்கங்கள்:

- அதிக பெண்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தினை உருவாக்கல்: எவ்விதமான வருமானப் பிறப்பாக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபடாத பெண்களை விவசாயத்தில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கக்கூடியதாக இருந்தமை இந்த முன்னெடுப்பினால் ஏற்பட்ட மிகப் பெரிய வெற்றியாகும். இதன் விளைவாக, சேதனப் பயிர்ச்செய்கை என்பது பொருளாதார ரீதியாகச் சாத்தியமான வாழ்வாதாரம் என்பதைப் பெண்களும் அவர்களின் ஒட்டுமொத்த சமுதாயங்களும் உணர்வதற்கு வழியேற்பட்டுள்ளது.

- காணியின் செயற்திறன்மிக்க பாவனை: சமுதாயத்தில் வீடுகளைச் சுற்றி உற்பத்தித்திறன்மிக்க முறையில் பயன்படுத்தப்படாத பெருமளவு பயிர்செய்யக்கூடிய காணிகள் காணப்பட்டன. இந்த நிலங்களில் பயிர்ச்செய்கையினை ஆரம்பிப்பதற்கும் வீட்டுத் தோட்டத்தினை உருவாக்கவும் பெண்களுக்குப் பயிற்சியும் தொழில்நுட்ப ஆற்றலும் கருவிகளும் வழங்கப்பட்டன. இதனால் பெண்கள் தங்களின் சொந்தக் குடும்ப நுகர்வுக்காக உணவு உற்பத்தி செய்யும் நிலை உருவாக்கப்பட்டதுடன் இறுதியில் மிகை உற்பத்தியினை அவர்கள் விற்கும் வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டது.

- பெண்களின் தலைமைத்துவத்தினைப் பேரீத்தல்: அதிகமான பெண்கள் விவசாயத்தினுள் நுழைந்தமையினாலும் பெண் விவசாயிகளுக்கான கூட்டுறவுகளை நிறுவியமையினாலும் ஏற்பட்ட கூட்டு விளைவாகப் பெண் விவசாயிகள் தலைமைத்துவப் பதவிகளை வகிப்பதில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. விலைகள், உற்பத்தி அளவுகள், சந்தைகளைத் தெரிவுசெய்தல், சந்தையில் அரச மற்றும் தனியார் துறை மார்க்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துதல் தொடர்பான தீர்மானம் வகுத்தலில் பெண் விவசாயிகள் முன்னணிக்கு வந்துள்ளனர். மேலும் குடும்ப வருமானத்தினை உயர்த்துவதற்கான பெண்களின் பங்கேற்பு குடும்பச் செலவுகள் எவ்வாறு செலவழிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் தமது நேரம் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் பெண்களுக்கு அதிக சுயாதீனத்தினை வழங்கியுள்ளது.



## போராட்டங்களின் நிலம், அதிகாரத்தின் நிலம்: பாணம பெண் விவசாயிகள்

இலங்கைக் கிராமியப் பெண்கள் இன்னல்கள், சவால்கள் மற்றும் இழப்புக்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்கையில் மீண்டெழுந்தன்மையும் விடாமுயற்சியும் உடையவர்களாக இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பாணமவைச் சேர்ந்த சுமார் 350 குடும்பங்கள் 2010 ஆம் ஆண்டு அவர்களின் காணிகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். ரய்கம்வெல மற்றும் சாஸ்திரவெல ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயச் சமுதாயங்கள் 40 வருடங்களாகத் தாம் பயிர்செய்து வந்த காணிகளை விட்டு ஒரே நாளில் வெளியேற்றப்பட்டனர். சட்டவிரோதமான இந்தக் காணிப் பறிப்பினால் தமது வாழ்வும் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் பெண் விவசாயிகளின் தலைமையில் நீதி கோரி அயராாத நீண்ட போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

தமது காணிகளை மீளப்பெறலே நீதிக்கான பாதை எனும் இவர்களின் போராட்டம் எண்ணற்ற அரசியல் தலையீடுகளினால் மிகவும் குழப்பம் நிறைந்ததாக மாறியது. இச்செயற்பாட்டிய இயக்கம் ஆரம்பித்தது முதல் சமுதாய உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் ஒழுங்கமைப்பதில் இருந்து பல்வேறு மட்டங்களில் எதிர்ப்பாளர்களைக் கையாளுவது வரை பெண்களாலேயே தலைமை தாங்கப்பட்டது. தலைமுறை தலைமுறைகளாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த பாணம பெண்கள் தமது காணிகளுக்கான அணுகலை இழந்ததும் நாட்கூலிகளாக வேலை செய்து வருமானம் தேட ஆரம்பித்தனர். இது அவர்களின் குடும்பப் பொருளாதாரங்களைச் சீர்குலைத்து அவர்களின் குடும்பங்களைப் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் அதீத பாதுகாப்பற்ற நிலைக்கு இட்டுச்சென்றது.

இப்பெண்களுக்கு எதிராகப் பிரதிகூலமாக இயங்கும் சமத்துவமின்மைகளின் சமூக, அரசியல் மற்றும் கலாசார அம்சங்கள் சில சந்தர்ப்பங்களில் அதீதமானவையாக இருந்திருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் வெறுமனே பெண்களல்ல - அவர்கள் கிராமியப் பெண்கள், இப்பெண்கள் எதிர்க்கவேண்டியிருந்த ஆணாதிக்க சக்திகள் சமுதாயத்தின் சாதாரண வயதான ஆண்களோ அல்லது பெண்களோ அல்ல. இராணுவம் மற்றும் பொலிஸ் போன்ற மிகவும் உயர்ந்த அதிகாரத்தினைக் கொண்ட ஆணாதிக்க சக்திகளையே இவர்கள் எதிர்க்கவேண்டியிருந்தது. இத்தடைகளைத் தாண்டி தமது காணிகளை மீளப் பெறுவதற்காக இப்பெண்கள் நீதி கோரி தமது போராட்டத்தினைத் தொடர்வதெனத் திடசங்கற்பம் பூண்டனர். காணி உரிமைக்கான மக்கள் முன்னணி (PARL) போன்ற இதே நோக்கத்தினைக் கொண்ட ஏனைய நிறுவனங்களின் உதவியுடன் பாணம பெண்கள் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் ஆதரவு திரட்டுவதிலும் ஆதரித்துவாதாடுவதிலும் முனைப்பாக ஈடுபட்டனர்.

இறுதியில் 2016 ஆம் ஆண்டில் ரய்கம்வெலவில் உள்ள தமது காணிக்கான அணுகலைச் சமுதாயத்தினர் பெற்றுக்கொண்டனர். இது அபாரமான வெற்றியினைக் குறித்தது. 40 இற்கும் மேற்பட்ட பெண்கள் பயிர்ச்செய்கையில் தற்போது முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட இந்தக் காணிக்கான அணுகலை மீண்டும் பெற்றுக்கொண்டமை இலங்கையில் காணி உரிமைகளுக்கான ஆதரித்துவாதாடல் வரலாற்றில் ஒரு முன்னுதாரணமான வெற்றியாகத் தொடர்ந்து விளங்குகின்றது. இந்தக் காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்ளும் செயன்முறைக்குச் செயற்திறன்மிகு தூண்டுதலை வழங்க மூன்று உபாயமார்க்கங்கள் PARL இனால் பிரயோகிக்கப்பட்டன.

1. பெண்களை முன்னணியில் நிறுத்தல்: பெண் விவசாயிகளைப் பிரதானமாகக் கொண்ட பெண்கள் ஆதரித்துவாதாடல் மற்றும் ஆதரவு திரட்டல் முயற்சிகளின் - பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் முதல் எதிரப்புக்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் வரை - திட்டமிடலிலும் அமுல்படுத்தலிலும் கண்காணிப்பிலும் பெண் விவசாயிகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டனர். நீதிக்கான இந்தச் சமுதாய அழைப்பில் பெண்கள் மிகவும் செயற்திறனும் மீண்டெழுந்தன்மையும் கொண்ட முகவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

2. ஆதரித்துவாதாடல் மற்றும் அணிதிரட்டல் மீதான ஆற்றலை அதிகரித்தல்: தமது காணிகளை இழக்க முன்னர் பாணமவில் வாழ்ந்த இந்தச் சமுதாயத்தினர் பிரதானமாக விவசாய வாழ்வாதாரங்களில் ஈடுபட்டு வந்தனர் என்பதுடன் செயற்பாட்டியத்தில் எவ்விதமான முன்னனுபவமும் அற்றவர்களாக இருந்தனர்.

சமுதாய உறுப்பினர்களையும் ஏனைய ஆதரவாளர்களையும் ஒன்றுகூட்டி அவர்களை அணிதிரட்டுவதற்கும் ஊடகத்துடன் தொடர்பாடுவதற்கும் கொள்கை வகுப்போர்களுடன் தொடர்புகொள்வதற்கும் காணிச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் சமுதாய உறுப்பினர்களினதும் பிரதானமாகப் பெண்களினதும் ஆற்றலைக் கட்டியெழுப்புவது சமுதாயத்திற்கு உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் சிலவாகும்.

3. மீளப்பெற்றுக்கொண்ட காணிகளின் அபிவிருத்திக்கு உதவல்: சமுதாயம் பெற்றுக்கொண்ட காணியினை அபிவிருத்தி செய்வதற்குஈயுசுடு வலையமைப்பு உதவியினைத் திரட்டியது. வீடுகளைக் கட்டுவதற்கும் விவசாய நிலங்களை அமைப்பதற்கும் ஒட்டுமொத்தத்தில் சமுதாயம் அதன் வாழ்வினையும் வாழ்வாதாரத்தினையும் மீளக்கட்டியெழுப்பவும் வளங்கள் திரட்டப்பட்டன.

காணிக்கான அணுகலை மீளக்கோரியமையே பாணம காணி உரிமைகள் போராட்டத்தின் உச்சக்கட்டமாகும். எவ்வறாயினும் இந்த விவசாயச் சமுதாயத்திற்கு வழங்கப்பட்ட உதவி அவர்கள் தங்களை மீள நிலைப்படுத்திக்கொள்ள இயலுமாக இருக்கும் வரை தொடர்ந்து வழங்கப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களாக 40 பெண் விவசாயிகள் முனைப்பாக விவசாயத்தில ஈடுபட்டு வருகின்றமை மீளளிப்புத் தொடர்பான கணிசமான முன்னேற்றத்தினைக் காட்டுகின்றது.

இலங்கையில் காணியின்மை அல்லது காணிக்கான அணுகல் இல்லாமை பெண்கள் விவசாயத்தில் பங்குபற்றுவதை மட்டும் தடுக்காது திறனற்ற தொழிலாளர்களாக மற்றும் / அல்லது பெறுமதிச் சங்கிலிகளில் அடிப்படை உற்பத்தியாளர்களாக அவர்களின் வகிபாத்திரத்தினைத் தேக்கமடையவும் செய்கின்றது என்ற கருத்தினைப் பாணம காணிப் போராட்டம் உறுதிப்படுத்துகின்றது. காணிக்கான அணுகல் மற்றும் காணி உரித்தாண்மை ஆகியவை ஒரு விவசாயியாக அங்கீகரிக்கப்படுவதற்குப் பிரதான பங்களிப்பு வழங்கும் காரணிகளாக இருக்கின்றன. காட்டு விலங்குகளினதும் உள்ளூர் மற்றும் தேசிய அரவியல்வாதிகளதும் காலநிலை மாற்றத்தினதும் எண்ணற்ற அச்சுறுத்தல்களைத் தாண்டி இப்பெண்கள் பாணமவில் ரயகம்வெலவில் தாங்கள் மீண்டும் உரிமை கோரிப் பெற்றுக்கொண்டுள்ள காணிகளில் தொடர்ந்தும் வாழ்ந்தும் பயிர்செய்தும் வருகின்றனர்.

சோளம், பயறு, நிலக்கடலை, மரவள்ளி மற்றும் மரக்கறிகளை இப்பெண்கள் பொதுவாகப் பயிர்செய்கின்றனர். “அம்பாறை மற்றும் மொனராகலயைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இப்போது எமது பயிர்கள் மற்றும் உற்பத்திகள் பற்றித் தெரியும். இதனால் அவர்கள் எமது காணிகளுக்கு வந்து எமது உற்பத்திகளை வாங்குகின்றனர். இப்பயிர்ச்செய்கையினால் நாம் ஈட்டும் வருமானத்தின் கணிசமான பகுதி நீதிக்கான பலவருட அயரச்சி தரும் போராட்டத்தின் பின் நாம் மீண்டும் பெற்றுக்கொண்ட இக்காணியினை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது” என 2019 ஆம் ஆண்டில் இருந்து இச்செயற்பாட்டிய இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய முக்கியமானவர்களில் ஒருவரான எஸ். குசுமாவதி எனும் பெண் விவசாயி குறிப்பிட்டார்.

‘குறைநிரப்பும் வருமானப் பிறப்பாக்க மூலமாகச் சமுதாயச் சுற்றுலா முன்னெடுப்புக்களின் வித்தியாசமான அம்சங்களிலும் பெண் விவசாயிகள் பாணமவில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஈடுபாடு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் காலங்களையே அதிகம் சாரந்துள்ளது. பாணமவில் உள்ள பெண் விவசாயிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு வழங்கல் சிறிய அளவிலான சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகளை நடத்தல், கிராமத்து உணவுகளைப் பரிமாறல் போன்ற முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வந்தனர். சுற்றுலாத்துறை, உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் வீட்டில் இருந்து செய்யும் வியாபாரம் அல்லது சிறு முயற்சிகள் உள்ளடங்கலாக கிராமப் பிரதேசங்களில் தொழில் முயற்சியாண்மை மூலம் பெண்கள் தமக்கும் தமது சமுதாயத்தினருக்கும் வருமானப் பிறப்பாக்க வழிகளை உருவாக்கும் அதிகரித்துவரும் போக்குக் காணப்படுகின்றது.’ (Jackson & Smith, 2004). இவ்வாறான குறைநிரப்பல் வாழ்வாதார வாய்ப்புக்களில் ஈடுபடுவது அம்பாறையினைச் சேர்ந்த இந்தப் பெண்கள் குழக்களின் தகவமைக்கும் தன்மைக்கான மற்றும் பன்முக ஆற்றலுக்கான மேலதிக ஆதாரங்களாக இருக்கின்றன.

பாணமவில் காணிக்கான உரிமையினைப் பற்றிப்பிடிப்பதற்கான நீதி தேடிய இந்த நீண்ட ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியின் வெற்றி இந்தச் சமுதாயத்திற்குப் பல நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது. பிரதானமாகப் பெண்களினால் தலைமைதாங்கி நடத்தப்பட்ட ஒரு முன்னெடுப்பு எனும் ரீதியில் கிராமப் பெண்களின் ஆற்றலின் ஒட்டுமொத்தத் தோற்றப்பாட்டினையும் பெண் விவசாயிகள் பற்றிய மனப்பாங்கின் தோற்றப்பாட்டினையும் முன்னேற்றுவதற்கு இது பங்களிப்பு வழங்கியுள்ளது.

**பிரதான சாதகமான அம்சங்கள்**

- காணியினையும் வாழ்வாதாரத்தினையும் மீளளித்தல்: உற்பத்தித்திறன்மிக்க விவசாய நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்த விவசாயிகள் சமுதாயத்தினர் மீண்டும் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு காணிக்கான அணுகலை மீளப் பெற்றுக்கொண்டமை அவர்களை இயலுமாக்கியுள்ளது. தமது விருப்பத்திற்குரிய வாழ்வாதாரத்தில் ஈடுபடுவதற்கு இந்த விவசாயிகள் குழவினை இயலுமாக்கியமை இந்த இடம்பெயர்ந்த சமுதாயம் அதன் வாழ்வினை நீடுறுதியாக மீளக் கட்டியெழுப்புதலின் முக்கியமான அங்கமாகக் காணப்பட்டது.

- பொருளாதார வலுவூட்டல்: தமது காணிகளை 2010 ஆம் ஆண்டு இழந்த பெண் விவசாயிகளில் அதிகமானவர்கள் கற்குழிகளிலும் வயல்களிலும் தற்காலிகக் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்யும் நிலை உருவானது. தமது சொந்தக் காணிகளில் பயிர்செய்து உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான ஆற்றலைக் கொண்டிருந்த இந்த விவசாயிகள் சிறந்த உற்பத்திகள் மற்றும் சேவைகளை அணுகுவதற்கும் அவற்றிற்கு விலைசெலுத்துவதற்குமான தமது வருமானத்தினையும் ஆற்றலையும் அதிகரித்துள்ளனர்.

- அடையாளத்தினை மீளப்பெறல்: விவசாயச் சமுதாயங்களில், காணி என்பது ஒருவரின் அடையாளம் மற்றும் தொழிலுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. தமது சொந்தக் காணிகளுக்கு மீண்டும் திரும்பி வரக்கூடியதாக இருந்தமை பாணமவைச் சேர்ந்தவர்கள் என்ற உரிமை உணர்வினை இவர்களின் மனதில் பதித்துள்ளதுடன் இவர்களின் மூதாதையர்களின் வேர்களுடன் இவர்களை மீண்டும் இணைத்துள்ளது



## கூட்டுச் சேமிப்பு மூலமான பாதுகாப்புப் பொறிமுறை: தம்புத்தேகம பெண் விவசாயிகள்

பெண் விவசாயிகளுக்கு நிதிச் சேவைகளுக்கான அணுகல் இல்லாத காரணத்தினால் அவர்கள் சீவனோபாய விவசாயத்தில் இருந்து வர்த்தக மட்டத்திலான விவசாயத்திற்கு முன்னேறுவதில் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இலகுவாக அணுகக்கூடிய கடன் வசதிகள் அதீத சுரண்டல் மிக்க விதிகளுடனேயே வழங்கப்படுவதால் இது பெண் விவசாயிகளை மிகவும் பாதிப்புறுநிலை மிக்கவர்களாகவும் நிர்க்கதியானவர்களாகவும் ஆக்குகின்றது. இப்பிரச்சினைக்கான பதிலாக தம்புத்தேகமவில் இயங்கும் சமுதாய மட்ட அமைப்பான *ரஜரட்ட கமி சக்தி நிர்மான காவய* (RGNK), பெண் விவசாயிகளின் மத்தியில் சேமிப்புக் குழக்களை உருவாக்குவதற்கான ஒரு பொறிமுறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

சமுதாயத்தினைக் கபளீகரம் செய்யும் ஒழுங்கமைக்கப்படாத, சுரண்டல்மிக்க நுண்நிதிக் கம்பனிகளிடம் செல்வதைத் தடுக்கும் வெற்றிகரமான தடுப்புக் காரணி என இந்தச் சேமிப்புக் குழக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. கிராமியப் பெண் விவசாயிகள் கடன் வசதிகளைப் பெறுவதை இயலுமாக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட நிதிச் சேவைகள், நிதி மூலதனம் மற்றும் சேமிப்புப் பொறிமுறைகள் கிடைக்கின்றமை மிகவும் அரிதாக இருக்கின்ற காரணத்தினால், குழக்களை உருவாக்குவதன் மூலம் இயங்கும் ஒரு சேமிப்பு முறையினை RGNK வெற்றிகரமாக வடிவமைத்து அமுல்படுத்தியுள்ளது.

ஒரு சேமிப்புக் குழுவில் 10 முதல் 15 பெண்கள் உள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் வாராந்தம் 125 ரூபாவைக் குழுவுக்குச் செலுத்த வேண்டும். பெண் விவசாயிகளுக்குக் கடன் தேவைப்படுகையில் இந்தக் கூட்டுச் சுழற்சி நிதி மூலம் நிறுவனம் நிதியினை வழங்குகின்றது. கடன்கள் 2% வட்டியில் வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு பயிர்ச்செய்கைக் காலப்பகுதியில் இருந்தும் பெண் விவசாயிகள் வருமானம் ஈட்டுகையில் கடன்களைச் செலுத்துவதற்காக கடன் செலுத்துவதற்கு 6 மாதங்கள் வழங்கப்படுகின்றன. விவசாயி ஒருவர் தேவைப்படும் தொகையில் 20 சதவிகிதத்தைச் சேமிப்பு நிதிக்குச் செலுத்தியதும் அவர் கடன் பெறுவதற்குத் தகைமை பெறுகின்றார்.

நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பெண் விவசாயிகளையே இந்த முன்னெடுப்பு அடிப்படையில் இலக்குவைக்கின்றது. தொழிலாளர்களின் கொடுப்பனவுகளைக் கொடுத்துத் தீர்த்தல் அல்லது விவசாய உள்ளீடுகளின் திட்டமிடப்படாத கொள்வனவுகளுக்காகக் கொடுப்பனவு செலுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் அவசர விவசாயக் கடன்களைப் பெறும் வாய்ப்பினையும் இது வழங்குகின்றது. நிதி உதவி வழங்கும் இந்த முறை பெண் விவசாயிகளின் நிதியறிவினை அதிகரிக்கும் உதவியினையும் அவர்களைத் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்துவதையும் அவர்களுக்குச் சந்தைத் தகவல்களை வழங்குவதையும் மேலதிகமாகக் கொண்டுள்ளது.

நிதிச் சேவைகளைப் பெறுவதற்கான கட்டுப்பாடுகள் அல்லது நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமை ஆகிய தடைகளை எதிர்கொள்வதற்கு வழங்கப்படும் உதவிச் சேவைகளை உறுதிப்படுத்துவதற்காக இந்த உதவி முறைமை மூன்று பிரதான உபாயமார்க்கங்களை ஒன்றுதிரட்டியுள்ளது:

1. பெண் விவசாயிகளைக் குழக்களாக ஒழுங்கமைத்தல்: சேமிப்புக் குழக்களை உருவாக்கியமை பெண் விவசாயிகளின் மத்தியில் கூட்டுப் பிரக்ஞையினையும் அடையாளத்தினையும் மட்டும் உருவாக்காமல் அவர்கள் உயர் மட்டத்திலான வகைப்பொறுப்பினைப் பேணுவதற்கும் உதவுகின்றது. தகவல்களைப் பரப்புவதன் மூலம் ஆற்றலை அதிகரிப்பது தொடர்பான இலக்குவைக்கப்பட்ட உதவி இந்தக் குழக்கள் மூலமாகத் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றது.
2. ஆற்றலை அதிகரித்தல்: சேமிப்புக் குழக்களின் உறுப்பினர்களுக்கு நிதி அறிவு பற்றிய, சேதனப் பயிர்ச்செய்கை பற்றிய மற்றும் சந்தைக் கேள்விகளை அடையாளம் காண்பது தொடர்பான பயிற்சி வழங்கப்படுகின்றது.

3. பெண்களின் தலைமைத்துவத்தினை மேம்படுத்தல்: ஒவ்வொரு சேமிப்புக் குழுவும் அக்குழவினால் நியமிக்கப்பட்ட ஒரு பெண் தலைவரைக் கொண்டிருக்கும். சேமிப்புக் குழு தொடர்ந்தும் இயங்குவதை உறுதிப்படுத்தத் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களுக்கு இலக்குவைக்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேமிப்புக் குழக்களில் உள்ள பெண் விவசாயிகளுக்குக் கணக்குப் பதிவு மற்றும் கணக்குகளைச் சமனிலைப்படுத்தல் உள்ளிட்ட தொழில்நுட்ப நிதியறிவுத் திறன்கள் வழங்கப்படுகின்றன. சகல சேமிப்புக்கள் மற்றும் கடன்களின் பதிவுகளைப் பேணுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர். தமது வருமானங்களை மீள்முதலீடு செய்யுமாறு RGNK பெண் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதுடன் சாத்தியமானவிடத்து பயிர்செய்யக்கூடிய நிலங்களைக் கூட்டாகக் கொள்வனவு செய்யுமாறு சேமிப்புக் குழுக்களை அறிவுறுத்திவருகின்றது.

“தமக்குச் சொந்தமானது எனச் சொல்லக்கூடிய எச்சேமிப்பும் பொதுவாகப் பெண் விவசாயிகளிடம் இருக்கவில்லை. எமது சேமிப்புக் குழுவில் உள்ள ஒவ்வொரு பெண் விவசாயியும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குறைந்தது 150000.00 ரூபா சேமிப்பினைக் கொண்டுள்ளார். இவ்வகையான நிதிச் சுயாதீனம் பெண் விவசாயி ஒருவருக்குப் பணம் தேவைப்படுகையில் அவர் பாதிப்புறுநிலைக்குப் பலவந்தப்படுத்தப்படுவதைத் தடுக்கின்றது. எமது சேமிப்புக் குழக்களின் உறுப்பினர்கள் சமுதாய முன்மாதிரியாக நோக்கப்படுகின்றனர். நாம் அவர்களுக்கு நிதி தொடர்பான தொழில்நுட்பத் திறன்களை மாத்திரம் வழங்காமல் சேதனப் பயிர்ச்செய்கை மற்றும் சந்தைத் தகவல்கள் ஆகியவற்றிலும் அவர்களின் ஆற்றலை அதிகரிக்கின்றோம்” என இந்த முன்னெடுப்பின் ஸ்தாபக உறுப்பினரான தமயந்தி குலசூரிய குறிப்பிட்டார்.

இந்த உதவிப் பொறிமுறையினை உருவாக்கியமை பல நுண்நிதிக் கம்பனிகளால் உருவாக்கப்பட்டுள்ள சுரண்டல்மிக்க கடன் பொறியில் இப்பெண் விவசாயிகளும் அவர்களின் குடும்பங்களும் வீழ்ந்துவிடாமல் அவர்களை வெற்றிகரமாகப் பாதுகாத்துள்ளது. பெண் விவசாயிகளைக் குறிப்பாக இலக்குவைக்கும் நீண்ட கால மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியுடன் குறைந்த வட்டியுடனான கடன் திட்டங்களை வழங்குதல் சமுதாயத்தில் பல சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

**பிரதான சாதகமான தாக்கங்கள்:**

- ❖ நிதியறிவுமிக்க விவசாயச் சமுதாயத்தினை உருவாக்கல்: தம்புத்தேகமவில் உள்ள கிராமியப் பெண்கள் இந்த முன்னெடுப்பினால் வழங்கப்பட்ட பயிற்சியின் பின்னர் உயர் மட்டத்திலான நிதியறிவுடன் செயற்படுகின்றனர். வருமானம், செலவுகள், சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றினை முகாமைத்துவம் செய்வதற்கான அறிவினைக் கொண்டிருப்பது பெண் விவசாயிகளை வலுவூட்டுகின்றது. இது அவர்கள் அதிக தொழில்முனைவுத் தொலைநோக்கினைக் கொண்டிருப்பதற்கு இயலுமாக்குகின்றது.

- ❖ ஒழுங்கமைக்கப்படாத நுண்நிதி நிறுவனங்களில் இருந்து விவசாயிகளைப் பாதுகாத்தல்: பாதுகாப்பான நிதிச் சேவைகளுக்கான அணுகலைப் பெறுதல் மற்றும் சேமிப்பு மற்றும் முதலீடுகள் தொடர்பாக வழிகாட்டப்படல் ஒழுங்கமைக்கப்படாத நுண்நிதிக் கம்பனிகள் பற்றி இச்சமுதாயப் பெண் விவசாயிகள் அவதானமாக இருப்பதற்கு அவர்களை வலுவூட்டியிருக்கின்றது. குறுகிய மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியினுள் உயர் வட்டிக்குப் பெண்கள் கடன் பெறுவதை இது தடுத்துள்ளது. நுண்நிதிக் கம்பனிகளிடம் இருந்து நிதிச் சேவைகளைப் பெறுவதால் ஏற்படும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விளைவுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இந்த முன்னெடுப்பினால் இச்சமுதாய உறுப்பினர்களுக்கு இயலுமாக இருந்திருக்கின்றது.

◈ பெண் விவசாயிகளைத் தலைவர்களாக மேம்படுத்தல்: பெண் விவசாயிகளின் தலைமைத்துவத்தின் மூலம் சேமிப்புக் குழக்கள் இயக்கப்படுகின்ற காரணத்தினால் தீர்மானம் வகுத்தல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான தளங்களைப் பெண்கள் வகிப்பதற்கான பரந்த சமுதாய அங்கீகரிப்புக் கிடைத்துள்ளது. அதிகரித்துள்ள தொழில்நுட்ப அறிவும் சந்தைத் தகவல்களும் முன்பிருந்ததைவிட மிகஉயர்ந்த மட்டத்தில் பெண் விவசாயிகளை அவர்களின் சமுதாயத்தில் நிலைநிறுத்தியுள்ளது.



## நீடுறுதிமிக்க சந்தை விரிவாக்கல்கள்: வலப்பனைப் பெண் விவசாயிகள்

இலங்கைப் பெண் விவசாயிகள் ஆண்களை விட சொற்பமான சந்தை இணைப்புக்களையும் நிதி வளங்களையும் கொண்டுள்ளமையானது அவர்கள் தங்களின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வர்த்தக மட்டத்திற்கு நகர்த்துவதையும் பெறுமதிச் சங்கிலிகளில் மேலே நகர்வதையும் கடினமானதாக ஆக்கியிருக்கின்றது. பெண் விவசாயிகள் எதிர்நோக்கும் இந்தத் தடைகளை அகற்றுவதற்காக வலப்பனை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

பெண் விவசாயிகள் அசேதன விவசாய நடவடிக்கைகளில் இருந்து சேதன விவசாய நடவடிக்கைகளுக்கு மாறுவதற்கு உகந்த சூழலை உருவாக்குவதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. சந்தைத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், சந்தைகளை அணுகல், ஒட்டுமொத்தச் சந்தைப் பொருளாதாரத்தில் பேரம் பேசுதல் மற்றும் பேச்சுவார்த்தை நடத்தல் உள்ளிட்ட பல தடைகளால் வலப்பன பெண் விவசாயிகள் அல்லாடுவது அடையாளம் காணப்பட்டது. இந்தச் சவால்களுக்குப் பல்வேறு மட்டங்களில் ஒத்திசைவான தீர்வுகளின் தொகுதி ஒன்றினை வழங்குவதற்கு இந்த இடையீடு நாடியது.

ஆரம்பத்தில், தெரிவுசெய்யப்பட்ட பெண் விவசாயிகள் சேதன வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதற்கு அவசியமான தொழில்நுட்ப அறிவும் கருவிகளும் ஏனைய அவசியமான விவசாய உள்ளீடுகளும் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்குச் சமாந்தரமாக வழங்கப்பட்ட உதவியும் அதிகரிக்கப்பட்டது. சந்தைகளுக்கான அணுகலை வழங்கல், பெறுமதி சேர்க்கை முறைகளை அறிமுகப்படுத்தல், விநியோகச் சங்கிலிகளை விஸ்தரித்தல் இடையீடுகளின் இரண்டாம் நிலையில் வசதிப்படுத்தப்பட்டன.

தற்போது வலப்பனவைச் சேர்ந்த 300 இற்கும் அதிகமான பெண் விவசாயிகள் இந்த உதவி வலையமைப்பில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த இடையீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக 5 பிரதான உபாயமார்க்கங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன:

1. அசேதன விவசாயத்தில் இருந்து சேதன விவசாயத்திற்கு ஒரு முறைமையான மற்றும் படிப்படியான நிலைமாற்றத்தினை வசதிப்படுத்தல்: சிறிய அளவில் முதலில் சேதனப் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியதன் மூலம் முன்னெடுப்பு மிகவும் சாதுர்யமாக அசேதன விவசாயிகளை சேதன விவசாயிகளாக மாற்றியது. பெண் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப அறிவினையும் விவசாய உபகரணங்களையும் சேதனப் பசளையினையும் ஏனைய விவசாய உள்ளீடுகளையும் வழங்கியதன் மூலம் சுற்றாடலுக்குத் தீங்கற்ற பயிர்ச்செய்கை முறைகளை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டது. வீட்டுத் தோட்டத்தில் இருந்து வந்த உற்பத்திகள் அதிகரித்த காரணத்தினால் படிப்படியாக வழங்கப்பட்ட உதவியும் அதிகரிக்கப்பட்டது.

2. பெண் விவசாயிகள் குழுக்களை உருவாக்கல்: இது பெண் விவசாயிகளின் மத்தியில் கூட்டுப் பிரக்ஞையினைத் தொடர்ந்து பதித்துவருவதுடன் கூட்டுப் பேரம் பேசல் மூலமாகவும் விலை நிர்ணயிப்பு மூலமாகவும் அவர்களை அனுகூலமிக்க நிலைக்கு ஆளாக்கிவருகின்றது.

3. பெறுமதி சேர்க்கைப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தல்: பங்கேற்புமிகு உத்தரவாத முறைமை மூலமான சான்றுப்படுத்தல் (PGS), பொதியிடல் மற்றும் உணவு பதனிடல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், அறுவடைக்குப் பின்னரான சேதாரத்தினைக் குறைப்பதற்காக மிகையான உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கான பொறிமுறைகள் ஆகியவை பெண் விவசாயிகளின் உற்பத்திகளுக்குப் பெறுமதியைச் சேர்த்துள்ளன.

4. சந்தைகளுக்கான அணுகலை உருவாக்கல்: சந்தைக் கேள்விகள் மற்றும் விலைகள், 'பசுஞ்சமுதாய மன்றின்' உருவாக்கல் மூலம் பரந்த நுகர்வோர் தளங்களைப் பெண் விவசாயிகள் அணுகுவதை வசதிப்படுத்தல் போன்ற சந்தைத் தகவல்களுக்கான அணுகலை இயலுமாக்கல் - கிராமியப் பெண் உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட சந்தைத் தளம் பெண் விவசாயிகளின் உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்திற்கு உதவியுள்ளது.

5. பாரம்பரிய, சுற்றாடல் ரீதியாக நீடுறுதியான பயிர்ச்செய்கை நடைமுறைகளுக்கு உதவுவதற்காக உயர் மட்ட விவசாயத் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல்.

இந்த இடையீடுகளுக்கு முன்னர் சமுதாயத்தில் அவதானிக்கப்பட்ட ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தடைக் காரணி மரக்கறி விலைகளில் ஏற்பட்ட தளம்பலாகும். இது பெண் விவசாயிகளைப் பாதிப்புறு நிலைக்கு ஆளாக்கியது. இச்சூழ்நிலைகளில் பெண் விவசாயிகளினால் இலாபத்தினை அல்லது இலாப நட்டமற்ற நிலையினை அடைய முடியாமல் இருந்திருக்கலாம். இதனைத் தொடர்ந்து சந்தைத் தகவல் பரப்பல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் நடப்புச் சந்தை நிலவரங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. இது சேதன உற்பத்திகளின் விலைத் தரப்படுத்தலுக்குப் பங்களிப்பு வழங்கியதுடன் பெண் விவசாயிகள் தற்போது இற்றைப்படுத்தப்பட்ட சந்தைத் தகவல்களை அவர்களின் மொபைல் தொலைபேசிகளில் இருந்து அணுகக்கூடியதாக உள்ளதுடன் அசேதன உற்பத்திகளை விட சேதன உற்பத்திகளை 20 சதவிகிதம் அதிக விலைக்கு விற்கக்கூடியதாகவும் உள்ளனர்.

வலப்பனயில் உள்ள பெண் விவசாயிகள் சிற்றின மட்டத்திலும் பேரண்ட மட்டத்திலும் எதிர்நோக்கும் சவால்களைத் தீர்ப்பதை இந்த இடையீடு தீர்க்க நாடியது. பெண் விவசாயிகள் சந்தைகளுக்குச் செல்வதை வசதிப்படுத்துவதற்காக இடையீடு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் முயற்சித்தது. இந்த இடையீடு தொடர்ந்தும் வெற்றிகரமாக இயங்கிவருவதுடன் இது ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பெண் விவசாயிகளின் வாழ்வினையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்தியுள்ளது.

**பிரதான சாதகமான தாக்கங்கள்:**

- ◈ சுற்றாடல் ரீதியாக நீடுறுதியான விவசாய நடைமுறைகளை மேம்படுத்தல்: தற்போது 300 இற்கும் மேற்பட்ட பெண் விவசாயிகளும் அவர்களின் குடும்பங்களும் சேதனப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். மனப்பாங்கில் ஏற்பட்ட சாதகமான மாற்றங்களும் விழிப்புணர்வில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதிகமான பெண்கள் நீடுறுதியான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்த அவர்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வருவதுடன் அதிகமான விவசாய அதிகாரிகள் அவ்வாறான முன்னெடுப்புக்களுக்கு உதவுவதையும் ஊக்குவித்து வருகின்றன.

- ◈ புதிய சந்தைகளின் உருவாக்கம்: பெண் விவசாயிகளுக்கு உதவப் புதிய சந்தைகள் நிறுவப்பட்டுள்ளன. வலப்பனயில் நடைபெறும் வாராந்த விவசாயிகள் சந்தைக்கு மேலதிகமாக பசுஞ்சமுதாய மன்றின் மூலமாகப் பெண் விவசாயிகளினால் பரந்த வாடிக்கையாளர் தளத்திற்கு அவர்களின் உற்பத்திகளை விற்கக்கூடியதாக இருக்கின்றது. சுப்பர்மார்க்கட்கள் மற்றும் ஏனைய பாரிய விற்பனையாளர்களுடன் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் வினைத்திறன்மிக்க விநியோகச் சங்கிலியினை நிறுவியமையினால் சுழற்சி முறையிலான கிரமமான கேள்வி மற்றும் விநியோகப் பொறிமுறை அமுலில் இருக்கின்றது. புதிய சந்தைகளின் விரிவாக்கல் சேதன உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு இட்டுச்செல்லும் உயர் மட்டத்தினை அடைந்துள்ளது.

- உயர் மட்டத்திலான தொழில்நுட்பப் பரவல்: பெண் உற்பத்தியாளர்கள் அவர்களின் உற்பத்திக்கு பெறுமதி சேர்க்கையினை ஒருங்கிணைப்பதற்காக அவர்களுக்குத் தொழில்நுட்ப வசதிகளும் உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுகின்றன அவர்கள் பயிற்சி மற்றும் அறிவு மாற்றம் ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்கின்றனர். மேலும் கருவிகள் மற்றும் இயந்திரங்களும் வழங்கப்படுகின்றன. இது பெண் விவசாயிகள் சமுதாயம் விவசாயத்திற்குப் புதிய மற்றும் புத்தாக்கமிக்க தோற்றப்பாட்டினை வழங்குவதற்கு அவர்களை ஊக்குவிக்கின்றது.

- பெண்களின் தலைமைத்துவத்தினை வலுப்படுத்தல்: PGS முறைமைகளில் தரப்பரிசோதனைச் செயன்முறைகளில் தலைமைத்துவப் பதவிகளுக்குப் பெண் விவசாயிகள் நியமிக்கப்படுகின்றனர். மேலும் அறிவு மற்றும் தகவல் பகிர்வுக்கான முகவர்களாகவும் நியமிக்கப்படுகின்றனர். பெண் விவசாயிகளுக்கு இலக்குவைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆற்றலையும் உயர் மட்டத்திலான பொறுப்பினையும் கட்டுப்பாட்டினையும் வழங்குவது அவர்கள் அங்கீகரிக்கப்படுவதை இயலுமாக்கியுள்ளதுடன் அவர்கள் தங்களின் சமுதாயத்தில் தலைவர்களாகவும் தீர்மானம் வகுப்போர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் இயலுமாக்கியுள்ளது.




SOMETHING

**உணவு முறைமைகளை நிலைமாற்றுவதில் பெண் விவசாயிகளின் வகிபாத்திரம்:**
**மக்களின் உணவு முறைமைக்கான சிவில் சமூக அமைப்புக்களின் பரிந்துரைகள்**

லோ அன்ட் சொசைட்டி டிரஸ்டும் (**LST**) சவிஸ்திரி பெண்கள் இயக்கம்
இலங்கையும் வீ இபெக்ட் (**We Effect**) உடன் பங்காண்மை அமைத்து
இணைந்து சமர்ப்பிக்கும் கலந்தாலோசிப்பு அறிக்கை

**இணைந்து செயலாற்றியவர்:**

செயல்படுத்தியவர்:

பொறுப்பு துறுப்பு: இவ் ஆவணத்திற்கான நிதி அனுசரணை முழுமையாக.்.பகுதியளவில் ஸ்வீடிஷ் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபன முகவராண்மையினால் (Sida) மற்றும் We Effect இனால் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இதில் கூறப்பட்டுள்ள அபிப்பிராயங்களுடன் Sida மற்றும் We Effect உடன்படுகின்றன என்பதாக எவ்விதத்திலும் கருதப்படலாகாது.